


# புதுகை வரலாறு நாளிதழ்




WWW.VARALARUU.COM VARALARUU PUDUGAIVARALARU VARALARUU 7502051351

வியாழன் ❖ ஏப்ரல். 13, 2023 | புதுக்கோட்டை | 4 பக்கம் ❖ வரலாறு 8 ❖ இதழ் 188 ❖ ரூ.10


## சுதந்திர இந்தியாவில் தாமாக இணைத்துக் கொண்ட சமஸ்தானம்

# விடைப்பெற்றார்

### பாரம்பரியமிக்க புதுக்கோட்டை சமஸ்தானத்தின் ராஜமாதா ராணியார் ரமாதேவி தொண்டைமான் காலமானார்

## தலைவர்கள் இரங்கல் : இறுதிச்சடங்கு இன்று காலை நடைபெறுகிறது







புதுக்கோட்டை, ஏப்.13-

புதுக்கோட்டை சமஸ்தானத்தின் கடைசி மன்னர் ராஜகோபால தொண்டைமான் சகோதரர் ராதாகிருஷ்ணன் தொண்டைமான் மனைவி ராணியார் ரமாதேவி தொண்டைமான் (83) நேற்று உடல் நலக்குறைவால் காலமானார்.

**புதுக்கோட்டை அரசு தோன்றிய வரலாறு**

கள்ளர் குலத்தில் தலைவராக திகழ்ந்த ஆவுடை இரகுநாத தொண்டைமான். விஜய நகர அரசு வாரிசான மூன்றாம் ஸ்ரீரங்காவிற்கு, படை தளகர்த்தராக விளங்கினார். அவர் அங்குள்ள மற்ற தளபதிகளை வென்று விஜய நர பேரரசால் ராய ராகூட்ட ராய வஜ்ஜிருடு ராய மன்னிட ராயா என்று பட்டம் சூட்டப்பெற்று அந்தப்பகுதியில் புதியக்கோட்டை ஒன்றைக் கட்டிக்கொண்டு ஆட்சி புரியத் துவங்கினார்.

**இரகுநாத ராயா தொண்டைமான் 1686 – 1730**

ஆவுடை தொண்டைமானின் மகன் இரகுநாத ராயா தொண்டைமான் 1661ல் தன்னுடைய தந்தையாரின் மறைவிக்குப்பிறகு மன்னராக முடிசூட்டிக் கொண்டார். இரகுநாத ராயா தொண்டைமான் மிகுந்த தெய்வபக்திஉடையவராகவும், வேட்டையாடுவதிலும், வேல்க்கம்பு சுற்றுவதிலும் இணையற்ற வீரராகத் திகழ்ந்தார். சேது, இராமேஸ்வரம் செல்கின்ற யாத்ரீகர்களை துன்பறுத்திய கொள்ளைக்காரர்களை இவர் அடக்க வேண்டுமென்று தஞ்சை மன்னர் இவர் தலைமையில் பாதுகாப்பு படையொன்றை நிறுவினார். கொள்ளைக்காரர்களை வேட்டையாடி யாத்ரீகர்களின் பயத்தை போக்கியதால் தஞ்சை மன்னர் இவருக்கு இராம மடம் என்னும் வைர மாலையையும், பெரிய இராமபாணம் என்று கூறப்படும் வில் அம்பையும் பரிசாக அளித்தார். பின்னர் இவர் தன்னுடைய சகோதரி கதலி ஆயியை இராமநாதபுர மன்னன் கிழவன் சேதுபதிக்கு மணம் முடித்து 1686ல் தன்னுடைய ராஜாங்கத்தை விரிவுப்படுத்தினார். குளத்தூர் மற்றும் திருமயத்தை வென்று, கிழவன் சேதுபதியால் சின்ன இராமபாணம் வழங்கப்பெற்றார். இரகுநாத ராயா தொண்டைமானின் சகோதரர் நமணத் தொண்டைமான் 1960ல் குளத்தூர், விராலிமலை அம்மன் குறிச்சியை உள்ளடக்கிய தன் அரசை நிறுவினார். குளத்தூரில் சிவன் கோவில் ஒன்றும், திருமால் கோவில் ஒன்றும், மன்னர் நமணத் தொண்டைமானால் நிறுவப்பட்டது. குளத்தூர் அரசு புதுக்கோட்டை அரசுக்கு பக்க பலமாக விளங்கியது. அவர்களுக்குள் போட்டியில்லை, பொறாமையில்லை. புதுக்கோட்டை மன்னர் இரகுநாதராயதொண்டைமான் 44 ஆண்டுகள் மிகச் சிறப்பாக ஆட்சி செய்து பல போர்களில் வெற்றி பெற்று தனது அரசை விரிவு படுத்தினார்.

**இராஜகோபால தொண்டைமான் 1928 – 1948**

புதுக்கோட்டை தொண்டைமான் பரம்பரையில் 9வது மன்னராக இராஜகோபால தொண்டைமான் 1928 - ல் பொறுப்பேற்றார். அப்போது அவருக்கு வயது 6 ஆகும். இராஜகோபால தொண்டைமான் 1922 ஆம் ஆண்டு இராஜ்குமார் இராஜேந்திர தொண்டைமானுக்கும் ஜானகி ஆயி அவர்களுக்கும் மகனாகப் பிறந்தார். தனது 22 ஆம் வயதில் ஆட்சி உரிமை பெற்றார். 1934 ல் சர் அலெக்சாண்டர் டாட்டன்காம் (Sir Alexander Tattonham) சமஸ்தான ஆட்சியாளராகப் பதவி ஏற்றார். அவரின் சீர்திருத்தங்கள் மிகவும் புகழ் பெற்றவை. வருவாய்த்துறை, நீர் பாசனம், நிதி, கூட்டுறவு ஆகிய பல துறைகளிலும் சிறந்த சீர்திருத்தங்களை செய்து புதுக்கோட்டையை நவீன சமஸ்தானமாவதற்கு வேண்டிய பல அடிப்படை காரியங்களைச் செய்தார். மன்னர் இராஜகோபால தொண்டைமான் ஆட்சியில் 1929 ஆம் ஆண்டு திருச்சியிலிருந்து புதுக்கோட்டை வழியாக மானாமதுரைக்கு இரயில் போக்குவரத்து துவக்கப்பட்டது. இதே ஆண்டில் புதிய அரண்மனையும் கட்டப்பெற்று 1930 ஆம் ஆண்டு மன்னர் குடியேறினார். 1948 ல் இந்திய நாடு சுதந்திரம் அடைந்தபோது 26 வயது நிரம்பிய இளம் மன்னர் தன்னுடைய அரசை இந்திய அரசுடன் இணைத்தார். அன்று கஜானாவிலிருந்த மொத்தப பணத்தையும் (சுமார் 45 இலட்சம்) மற்றும் அரசாங்க சொத்து முழுவதையும் இந்திய அரசிடம் ஒப்படைத்தார். சுதேச மன்னர்களில் பெருமாபாலானோர் தத்தம் சமஸ்தானங்களை இந்திய யூனியனில் இணைக்க வல்லடி வழக்கிட்டு ஒத்து வராமல் இருந்த நிலையில் இராஜா இராஜகோபால தொண்டைமான் நடந்து கொண்டது பரம்மிக்கத்தக்கதாய் இருந்தது. முடிதுறந்த மன்னரான இராஜா இராஜகோபாலத் தொண்டைமான் இராஜரிஷியாக திருச்சியில் தமது அரண்மனையில் ஒரு எளிய வாழ்க்கை வாழ்ந்து மறைந்தார். இந்த இராஜரிஷி வடமொழியில் வல்லவர். இவர் மெக்கானிசம், போட்டோகிராபி போன்ற தொழில்நுட்பங்களிலும், ஓவியம் போன்ற கலைகளிலும் வல்லவர். பழம்பெரும் கலைகளில் தமது கருத்தைச் செலுத்தி கவிதை ஆத்திக்கொண்டு தனது வாழ்க்கையை முடித்தவர். மீண்டும் 1974ல் தான் வாழ்ந்த 99.99 ஏக்கர் பரப்பளவு கொண்ட புதுகை அரண்மனையும் (தற்போது உள்ள மாவட்ட ஆட்சியர் அலுவலகம்) அரசுக்கு மக்கள் நலனுக்காக மிக குறைந்த தொகைக்கு அளித்தார் என்பதே புதுகையின் வரலாறு.

மஹாராஜாவின் மூத்த சகோதரி கமலாம்பாள் அம்மாணி ராஜாயி, கல்லாக்கோட்டை ஜமீன்தார் விஜய இரகுநாத ரங்கசாமி பாலசுப்ரமணிய சிங்கப்புலியார் அவர்களை மணந்து, புதுக்கோட்டையில் PLACE GATE என்னும் அரண்மனையில் வாழ்ந்தார்கள்.

மஹாராஜாவின் இளவல் நடுமன்னர் இராதாகிருஷ்ண தொண்டைமான் அவர்கள் ராணி ரமாதேவி தொண்டைமான் அவர்களை 1954ம் ஆண்டு மணம் புரிந்தார்கள். அவர்கள் இருவரும் புது அரண்மனையில் (இன்றைய புதுகை மாவட்ட ஆட்சியாளர் அலுவலகம்) வசித்து வந்தார்கள். இருவருமே டென்னிஸ், கிரிக்கெட், வாலிபால் போன்ற விளையாட்டுகளை புதுக்கோட்டை மாவட்டத்தில் ஊக்குவித்து வந்தார்கள். நடுமன்னர் இலங்கை சென்று கிரிக்கெட் மேட்ச் விளையாடி நாட்டிற்கு பெருமை சேர்த்துள்ளார். ராணி ரமாதேவி தொண்டைமான் வீணை மற்றும் நாட்டியத்தில் சிறந்தவர். ஓரியண்டர் சமஸ்கிருத பள்ளியை இன்றளவும் நடத்தி வருகின்றார்கள்.

மஹாராஜா அவர்களின் இளைய சகோதரி மதுராம்பாள் அம்மணி ராஜாயி, சிவகங்கை மன்னர் ராஜாசாஹேப் கௌரி வல்லபஷன்முக ராஜாவை மணந்து. சிவகங்கை அரண்மனையில் வாழ்ந்தார்கள். இளைய மன்னர் விஜய இரகுநாத தொண்டைமான் 3 முறை புதுக்கோட்டை காங்கிரஸ் சட்டமன்ற உறுப்பினராக மக்கள் பணியாற்றியவர். தன்னுடைய சகோதரியின் மகள் மீனாம்பாள் ராஜாயியை திருமண முடித்தார். இவர்களும் சிறந்த விளையாட்டு வீரர் ஆவார்கள். ரஞ்சிக்கோப்பை கிரிக்கெட் போட்டியில் பங்கெடுத்த பெருமையினை பெற்றவர். கொடைக்கானலில் உள்ள போட் கிளப்பின் தலைவராக மிகசிறந்த முறையில் பணியாற்றினார்கள். மிகுந்த பரோபகாரி.

நடுமன்னரின் புதல்வர்கள் மூத்த மகன் ஸ்ரீ பிரகதாம்பாள் தாஸ் ராஜ ராஜகோபால தொண்டைமான் பத்தாவது மன்னராக ஸ் வீகாரம் செய்யப்பெற்றவர். தற்போதைய மன்னர் சிறந்த கிரிக்கெட் வீரர் மற்றும் சிறந்த துப்பாக்கி சுடும் வீரர்.ஸ்கீட் என்னும் பிரிவில் தேசிய அளவில் பல பதக்கங்களையும் பெற்றிருக்கிறார். புதுக்கோட்டை மாவட்டம் கீரனூர் அருகில் உள்ள ஆவாரங்குடிபட்டியில் சர்வதேச தரம் வாய்ந்த துப்பாக்கி சுடும் தளத்தை நிறுவி அதில் டிராப், டபுள் டிராப்,ஸ்கீட் ஆகியபிரிவுகளில் இளைஞர்களுக்கு பயிற்சி அளித்து வருகிறார். அவர் மனைவி ஸ்ரீமதி சாருபால தொண்டைமான் மறைந்த பாஸ்கர தொண்டைமானின் பெயர்த்தி ஆவார். இவர் கடந்த 2001 ஆம் ஆண்டு முதல் 2009 ஆம் ஆண்டு வரை திருச்சி மாநகராட்சி மேயராக 9 ஆண்டுகள் சிறப்பாக பணியாற்றி மக்களின் நன்மதிப்பை பெற்றவர். திருச்சியில் உள்ள புதுக்கோட்டை அரண்மனை வளாகத்தில் உள்ள மன்னர் மெட்ரிகுலேஷன் பள்ளியின் தாளாளராகவும் விவசாயத்தின் மேல் உள்ள பற்றின் காரணமாக இயற்கை விவசாயத்தையும் ஆர்வத்தோடு செய்து வருகின்றார். ராஜ்குமார் தொண்டைமான் சிறந்த புகைப்பட நிபுணர். விதவிமான பறவைகளையும், இயற்கை காட்சிகளையும் படம்பிடிப்பதில் மிகுந்த ஆர்வம் உள்ளவர்.

நடுமன்னர் அவர்களின் புதல்வி ராஜ்குமாரி ஜானகி மனோகரி இராஜாயி ஆவார். இவர் சிறந்த வாலிபால் விளையாட்டு வீராங்கனை மற்றும் தேசிய அளவிலான போட்டிகளிலும் பங்கேற்ற பெருமைக்குரியவர். இளைய மன்னரின் புதல்வர் இராஜ்குமார் கார்த்திக் தொண்டைமான் ஆவார். இவர் 2011-2012 ம் ஆண்டு புதுக்கோட்டை நகர மன்ற தலைவராகவும், 2012 முதல் 2016 ம் ஆண்டு வரை புதுக்கோட்டை அ.இ.அ.தி.மு.க. சட்டமன்ற உறுப்பினராகவும் மக்கள் பணியாற்றியவர் என்பது குறிப்பிடதக்கது.

புதுக்கோட்டை சமஸ்தானத்தின் ராஜ மாதா ஸ்ரீ ராஜகோபால தொண்டைமான், ஸ்ரீ விஜயகுமார் தொண்டைமான் ஆகியோரின் அன்பு தாயார் ராணி ஸ்ரீ ரமாதேவி தொண்டைமான் அம்மையார் கடந்த அக்டோபர் 1ம் தேதி தனது 83வது பிறந்தநாளை கொண்டாயிருந்தார்கள். இருப்பினும் வயது முதிர்வு காரணமாக திருச்சியில் உள்ள மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வந்தார். இந்நிலையில் ராணியார் நேற்று (12.04.2023) இயற்கை எய்திவிட்டார் அவரின் இறுதி சடங்குகள் இன்று காலை 10 மணிக்கு புதுக்கோட்டை - தஞ்சை சாலையில் இச்சடியில் உள்ள சிவார்பணம் அரண்மனையில் நடைபெற உள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. ராஜா மாதா மறைவுக்கு பல்வேறு அரசியல் கட்சித் தலைவர்கள் இரங்கல் தெரிவித்துள்ளனர். புதுக்கோட்டை மாவட்ட வர்த்தக கழகத்தின் சார்பில் இன்று காலை 8 மணிக்கு சில்வர் ஹாலில் இருந்து வர்த்தகர்கள் ஒரு சேர பங்கேற்று ராஜமாதாவுக்கு அஞ்சலி செலுத்த உள்ளனர். அரசு சார்பில் ராஜமாதாவின் உடலுக்கு மாவட்ட கலெக்டர் கவிதா ராமு நேற்று மலர்வளையம் வைத்து மரியாதை செலுத்தினார்.




# இன்று




## சிந்திப்போம்.... செயல்படுவோம்







# தமிழக சட்டசபையில் இனி கவன ஈர்ப்பும் நேரலை செய்யப்படும்– சபாநாயகர் அப்பாவு அறிவிப்பு

சென்னை , ஏப்.13–

தமிழக சட்டசபையில் நேற்று கேள்வி நேரம் முடிந்ததும் எதிர்க்கட்சி தலைவர் எடப்பாடி பழனிசாமி கவன ஈர்ப்பு தீர்மானம் கொண்டு வந்தார். அப்போது பேசிய அவர், "விருத்தாசலத்தில் படிக்கும் சிறுமிக்கு பாலியல் தொல்லை கொடுத்த அந்த பள்ளியின் உரிமையாளரான தி.மு.க. கவுன்சிலர் மீது கடும் நடவடிக்கை எடுக்க வேண்டும்" என்று வலியுறுத்தினார்.



எடப்பாடி பழனிசாமி பேசுவதை நேரலை செய்யாததால் அதிருப்தி அடைந்த அதிமுக உறுப்பினர்கள் வெளிநடப்பு செய்தனர். பின்னர் செய்தியாளர்களை சந்தித்த எடப்பாடி பழனிசாமி, சட்டப்பேரவையில் அதிமுக உறுப்பினர்கள் பேசும்போது நேரலை செய்யப்படுவதில்லை என்று குற்றம் சாட்டினார்.

அதன்பின்னர் சட்டசபையில் நேரலை தொடர்பாக காரசாரமாக விவாதம் நடைபெற்றது. எதிர்க்கட்சி தலைவர் எடப்பாடி பழனிசாமி பேசும்போது, நான் பேசுவதை நேரலை செய்வதில் என்ன பிரச்சனை? என கேள்வி எழுப்பினார். அப்போது சபாநாயகர் அப்பாவு பேசும்போது, நேரலை வழங்குவதில் உள்நோக்கம் எதுவும் இல்லை என்றும், சட்டப்பேரவை நிகழ்ச்சி நிரலில் இடம்பெறும் கவன ஈர்ப்புகள் இனி நேரலை செய்யப்படும் என்றும் அறிவித்தார்.

# அரியலூர் மாவட்டம் ஒட்டக் கோவில் கிராமத்தில் மக்கள் தொடர்பு முகாம்

அரியலூர்,ஏப்.13–

அரியலூர் மாவட்டம், ஒட்ட கோவில் கிராமத்தில், மாவட்ட ஆட்சியர் தலைமையில் நடைபெற்ற மக்கள் தொடர்பு முகாமில், 321 பயனாளிகளுக்கு, 2 கோடியே 17 லட்சம் ரூபாய் மதிப்பிலான நலத்திட்ட உதவிகள் வழங்கப்பட்டது.



அரியலூர் மாவட்டம், அரியலூர் வட்டம், ஒட்டக்கோவில் கிராமத்தில், வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மை துறையின் சார்பில், மக்கள் தொடர்பு முகாம் மாவட்ட ஆட்சித்தலைவர் பெ.ரமண சரஸ்வதி தலைமையில் நடைபெற்றது. இந்நிகழ்ச்சியில் மாவட்ட ஆட்சித்தலைவர் பேசியதாவது.

தமிழக அரசின் உத்தரவின்படி அரியலூர் வட்டம், ஒட்டக்கோவில் கிராமத்தில் மக்கள் தொடர்பு முகாம் நடைபெற்றது, இம்முகாமில் அனைத்துத் துறை மாவட்ட நிலை அலுவலர்களும் கலந்து கொண்டு தங்களது துறை சார்ந்து செயல்படுத்தப்படும் திட்டங்கள் குறித்து பொதுமக்களுக்கு விளக்கமாக எடுத்துரைத்தனர், இம்முகாமிற்காக ஏற்கனவே பொதுமக்களிடமிருந்து பல்வேறு கோரிக்கைகள் தொடர்பாக, மொத்தம் 294 மனுக்கள் பெறப்பட்டு, 275 மனுக்கள் ஏற்கப்பட்டு, 13 மனுக்கள் உரிய ஆவணங்கள் இல்லாத காரணத்தினால் தள்ளுபடி செய்யப்பட்டு, 6 மனு விசாரணையில் உள்ளது.

இம்முகாமில், வருவாய் மற்றும் வேளாண்மை துறை உள்பட பல்வேறு துறைகள் சார்பில், 321 பயனாளிகளுக்கு, ரூ.2.17 கோடி மதிப்பீட்டில் பல்வேறு நலத்திட்ட உதவிகள் வழங்கப்பட்டுள்ளது. மேலும் அரசு நலத்திட்ட உதவிகளை, பொதுமக்கள் உரிய முறையில் பெற்று பயன்பெற வேண்டும் என மாவட்ட ஆட்சித்தலைவர் பெ.ரமண சரஸ்வதி பேசினார்.

முகாமில் மகளிர் திட்ட இயக்குநர் முருகண்ணன், வேளாண் இணை இயக்குநர் பழனிச்சாமி, அரியலூர் வருவாய் கோட்டாட்சியர் ராமகிருஷ்ணன், சமூக பாதுகாப்பு திட்ட தனித்துணை ஆட்சியர் குமார், மாவட்ட வழங்கல் அலுவலர் ரவிச்சந்திரன், தோட்டக்கலை துறை உதவி இயக்குநர் சரண்யா, வட்டாட்சியர் கண்ணன், வருவாய் ஆய்வாளர் முருகன், கிராம நிர்வாக அலுவலர் முருகேசன், ஊராட்சி மன்றத் தலைவர் செங்கமலை, ஊராட்சி செயலாளர் சத்தியசீலன் மற்றும் அரசு அலுவலர்கள், பொதுமக்கள் உள்ளிட்ட பலர் கலந்துகொண்டனர், முடிவில் அரியலூர் தாசில்தார் கண்ணன் நன்றி கூறினார்.






அதிமுக பொதுச்செயலாளர் தொடர்பான வழக்கு நேற்று சென்னை உயர் நீதிமன்றத்தில் டிவிஷன் பெஞ்சில் விசாரணைக்கு வந்தது. எதிர் தரப்பினர் கேட்ட எந்த தடை உத்தரவும் பிறப்பிக்கப்படவில்லை. ஏற்கனவே தெரிவித்தபடி ஏப்ரல் 20 ஆம் தேதி வழக்கு விசாரணை நடைபெறும் என்று மட்டும் நீதிபதிகள் உத்தரவு பிறப்பித்தனர். வேறு எந்த விதமான இடைக்கால உத்தரவும் உயர் நீதிமன்றத்தால் பிறப்பிக்கப்படவில்லை. உயர் நீதிமன்ற வழக்கறிஞர்கள் மூத்த வழக்கறிஞர் விஜய நாராயணன், இன்பதுரை, பாலமுருகன், ஜாகிர் உசேன், இளையராஜா, மனோஜ், பாரதிராஜா ஆகியோர் உட்பட அனைவரும் ஆஜராகினர்.

# புதுக்கோட்டை ஆரோவில் கிட்ஸ் நர்சரி பள்ளியில் பட்டமளிப்புவிழா மற்றும் விளையாட்டு விழா

புதுக்கோட்டை, ஏப்.13–

புதுக்கோட்டை கீழ 4ம் வீதியில் உள்ள ஆரோவில் கிட்ஸ் நர்சரி & பிரைமரி பள்ளியில் பட்டமளிப்புவிழா விளையாட்டு விழா சிறப்புடன் நடைபெற்றது. புதுக்கோட்டை ஆரோவில் கிட்ஸ் நர்சரி & பிரைமரி பள்ளியில் சிறுவர்கள் மற்றும் மாணவர்களை ஊக்குவிக்கும் வகையில் பட்டமளிப்பு விழாவும், விளையாட்டு விழாவும் சிறப்புடன் நடைபெற்றது.



விழாவிற்கு கருவூலக அலுவலர் (ஓய்வு) தட்சிணாமூர்த்தி தலைமை தாங்கினார், பள்ளி தாளாளர் முத்துமாணிக்கம்முன்னிலை வகித்தார், பள்ளி முதல்வர் வசந்தமீனா அனைவரையும் வரவேற்றார், சிறப்பு விருந்தினராக மாத்தூர் ஐயப்பா அக்ரோ கெமிக்கல் மற்றும் ஈஷா டெக் நிர்வாக இயக்குனர் ஜெயக்குமார், –கலந்து கொண்டு மாணவ செல்வங்களுக்கு பட்டங்களை வழங்கினார் தொடர்ந்து விமலாதேவிஜெயக்குமார், பள்ளியில் சிறப்பாக பணியாற்றும் ஆசிரியர்களுக்கு விருதுகள் பரிசுகள் வழங்கி வாழ்த்தி பேசினார், பின்னர் நடைபெற்ற விளையாட்டு விழாவில் நச்சாந்துப்பட்டி மேல்நிலைப்பள்ளிவிளையாட்டுத்துறை ஆசிரியர் என். ராகேஷ், காமராஜபுரம் நகராட்சி மேல்நிலைப்பள்ளி விளையாட்டுத்துறை ஆசிரியை பிரமிளா, முள்ளூர் அரசு மேல்நிலைப்பள்ளி விளையாட்டுத்துறை ஆசிரியை பூந்தென்றல் ராணியார் அரசு மேல்நிலைப்பள்ளி விளையாட்டுத்துறை ஆசிரியை சௌந்தர்யா ஆகியோர் கலந்து கொண்டு மாணவ மாணவியர்களுக்கு விளையாட்டுப் போட்டிகள் நடத்தி அதில் வென்றவர்களுக்கு பரிசுகள் வழங்கினர், நிறைவாக மாணவி அப்ரா பாத்திமா நன்றியுரை வழங்கினார், பெற்றோர்கள் மாணவ மாணவியர்கள் சமூக ஆர்வலர்கள் ஆகியோர் கலந்து கொண்டனர், முன்னதாக மாணவர் க்ரிஷ் முன்னிலையில் மாணவ,மாணவியர்கள் அணிவகுப்பு நடைபெற்றது.



காரைக்கால் வடக்கு தொகுதி சட்டமன்ற உறுப்பினர் பி.ஆர்.என்.திருமுருகன். தலைமையில் வடக்கு தொகுதிக்கு உட்பட்ட நேருநகர், பி.கே சாலை மற்றும் தீன்ஸ் பார்க் ஆகிய மூன்று பள்ளிவாசல் நிர்வாகிகளையும் நேரில் சந்தித்து அவர்களிடத்தில் நோம்புக்கான புதுச்சேரி அரசு வழங்கும் தலா ரூ, 10000/– பத்தாயிரம் ரூபாய்க்கான காசோலையை தனி தனியாக வழங்கினார்.

# மேலநீலிதநல்லூரில் ராகுல்காந்தியை எம்.பி பதவியில் இருந்து தகுதி நீக்கம் செய்த மத்திய அரசை கண்டித்து வட்டார காங்கிரஸ் சார்பில் ஆர்ப்பாட்டம்

தென்காசி, ஏப்.13–

தென்காசி மாவட்டம் மேலநீலிதநல்லூர் வட்டார காங்கிரஸ் சார்பில் வட்டாரத் தலைவர் முருகையா தலைமையில் சேர்ந்தமரத்தில் கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெற்றது. இதில் ராகுல் காந்தியை அரசியல் ரீதியாக பழிவாங்கும் நோக்கத்துடன் கேரளா மாநிலம் வயநாடு நாடாளுமன்ற மக்களவைத் தொகுதி உறுப்பினர் பதவியில் இருந்து தகுதி நீக்கம் செய்த மத்திய பாரதிய ஜனதா அரசை கண்டித்து ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.



இதில் சிறப்பு அழைப்பாளராக தென்காசி எம்எல்ஏ, மாவட்ட காங்கிரஸ் தலைவர், அகில இந்திய காங்கிரஸ் உறுப்பினருமான பழனி நாடார் கண்டன உரையாற்றினார், மாவட்ட இலக்கிய அணித் தலைவர் பால்துரை, விஜயன் சேர்ந்தமரம் நகரத் தலைவர் டேவிட் துரை, மாவட்ட செயலாளர் ரத்தினம், வட்டார பொதுச் செயலாளர், வட்டார துணைத் தலைவர் சட்டியாகப்பன், முருகையா, மாவட்டத் தலைவர் எசி ,எஸ்டி பிரிவு பி .ராமச்சந்திரன், ஜெயபால், புளியங்குடி நகரத் தலைவர் பால்ராஜ், மணிகண்டன், ராஜாராம் செந்தூர் பாண்டியன், அழகுதுரை, சிங்கக்குட்டி, தாயார் தோப்பு ராமர், கீழப்பாவூர் பேரூராட்சி துணைத் தலைவர் ராஜேஷ் குமார், அடைச்சாணி முருகன், ராஜீவ் காந்தி, செங்கோட்டை தங்கராஜ், கோடீஸ்வரன் ஆகியோர் மோடி அரசை கண்டித்து ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

# சமூக நீதி மாணவர் இயக்கத்தின் சார்பில் பொதுதேர்வை மாற்றி வைக்க கோரிக்கை மனு

தென்காசி, ஏப்.13–

தமிழ்நாடு முஸ்லிம் முன்னேற்றக் கழகத்தின் மாணவர் அமைப்பான சமூக நீதி மாணவர் இயக்கத்தின் சார்பில் முதன்மை கல்வி அலுவலருக்கு கோரிக்கை தமிழ்நாடு முஸ்லிம் முன்னேற்ற கழகத்தின் மாவட்ட தலைவர் முகம்மது யாக்கூப் ஆலோசனையின் பேரில் சமூகநீதி மாணவர் இயக்கத்தின் மாவட்ட செயலாளர் மஜீத்ஷா தென்காசி மாவட்ட முதன்மை கல்வி அலுவலருக்கு கொடுத்த கோரிக்கை மனுவில் கூறியிருப்பதாவது,



தென்காசி மாவட்ட முதன்மை கல்வி அலுவலர் வெளியிட்ட மாணவ, மாணவிகளுக்கு பொதுத் தேர்வு வருகின்ற 12, 18, 19, 21, 24 ஆகிய தேதிகளில் நடைபெறும் என்ற அறிவிப்பை வெளியிட்டு இருந்தது. இஸ்லாமியர்கள் புனித ரமலானை எதிர்நோக்கி 21ஆம் தேதி பிறை தென்பட்டால் அன்றைய தினம் பெருநாளாகும் 21ஆம் தேதி நோன்பாக இருந்தாலும் கடைசி நோன்பாக இருப்பதினால் இஸ்லாமிய மாணவ மாணவிகள் அன்றைய தேதியில் மிக எதிர்பார்ப்பாக இருக்கும் என்பதினால் 21ஆம் தேதி நடைபெறும் பொது தேர்வை வேறு ஒரு தேதியில் மாற்ற வேண்டும் இதனால் இஸ்லாமிய மாணவ, மாணவிகளுக்கு புனித ரமலானை கொண்டாட இலகுவாக அமையும் என அதில் குறிப்பிடப்பட்டுள்ளது.



காரைக்கால் நகராட்சியில் பணிபுரியும் தூய்மை மேற்பார்வையாளர்கள் மற்றும் எச்.ஆர் நிறுவனத்தை சார்ந்த தூய்மை பணியாளர்கள் ஆகியவர்களுக்கு காரைக்கால் நகராட்சி அரங்கில் குப்பைகளை தரம் பிரிப்பது மற்றும் அதன் செயல்பாடுகள் குறித்த செயல் விளக்க கூட்டம் காரைக்கால் மாவட்ட துணை ஆட்சியர் (வருவாய்) மற்றும் நகராட்சி ஆணையர் (கூடுதல் பொறுப்பு) ஜான்சன் தலைமையில் நடைபெற்றது. இந்நிகழ்வில் செயற்பொறியாளர் லோகநாதன் வருவாய் அதிகாரி செல்லமுத்து மற்றும் சம்பந்தப்பட்ட அதிகாரிகள் மற்றும் ஊழியர்கள் இந்நிகழ்வில் கலந்து கொண்டனர்.

# புதுக்கோட்டையில் இல்லம் தேடி கல்வி தன்னார்வலர்கள் நடத்திய முப்பெரும்விழா எம்.எல்.ஏ வை.முத்துராஜா பங்கேற்பு



புதுக்கோட்டை, ஏப்.13–

கட்டியாவயல் மற்றும் எல்லைப்பட்டி இல்லம் தேடி கல்வி தன்னார்வலர்கள் சார்பில் கட்டியாவயல் அருகே உள்ள தனியார் திருமண மஹாலில் முப்பெருவிழா கொண்டாட்டம் நடைபெற்றது. விழாவில் புதுக்கோட்டை சட்டமன்ற உறுப்பினர் வை.முத்துராஜா, புதுக்கோட்டை நகர்மன்றத் தலைவர் திலகவதி செந்தில் ஆகியோர் கலந்து கொண்டு இல்லம் தேடி கல்வி திட்டம் சார்பில் நடைபெற்ற குறும்பட போட்டியில் சிறப்பாக நடித்து மாவட்ட அளவில் சிறப்பிடம் பிடிக்க காரணமாக இருந்த மாணவர்களுக்கும் ,இல்லம் தேடி கல்வி மையத்தில் மாணவர்களின் தனித்திறமையை வளர்த்தெடுத்த தன்னார்வலர்களுக்கும் ,விளையாட்டுப் போட்டியில் சிறப்பிடம் பிடித்த மாணவர்களுக்கும் சான்றிதழ்கள்,பதக்கங்கள்,கேடயங்களை வழங்கினர்.

முன்னதாக இல்லம் தேடி கல்வி மைய புதுக்கோட்டை மாவட்ட ஆசிரிய ஒருங்கிணைப்பாளர் கு.முனியசாமிக்கு தன்னார்வலர்கள் சார்பில் சட்டமன்ற உறுப்பினர் வை.முத்துராஜா நினைவுப்பரிசினை வழங்கி கௌரவித்தார். விழாவிற்கு வருகை தந்த சட்டமன்ற உறுப்பினர் வை.முத்துராஜாவிற்கு கட்டியாவயல் மைய இல்லம் தேடி கல்வி மைய மாணவர்களின் சார்பில் நடைபெற்ற வரவேற்பு நடனம் ,காண்போரின் கண்களுக்கு விருந்தாக இருந்தது.. அதே போல் கட்டியாவயல் மற்றும் எல்லைப்பட்டி மாணவர்கள் சார்பில் நடைபெற்ற மாணவர்களின் கலைநிகழ்ச்சியும் கண்போரை கவர்ந்த்து.

விழாவில் ஒருங்கிணைந்த பள்ளிக்கல்வி மாவட்ட உதவி திட்ட ஒருங்கிணைப்பாளர் ஜெ.சுதந்திரன்,ஒன்றிய கவுன்சிலர் ரெ.சிவயோகமலர் ,பஞ்சாயத்து தலைவர் எ.வி. எம்.க.பாபு,இல்லம் தேடி கல்வி மாவட்ட ஆலோசனைக் குழு உறுப்பினர் மணவாளன்,திருமயம் அரசு ஆண்கள் மேல்நிலைப்பள்ளி ஆசிரியை தமிழரசி,புதுக்கோட்டை ஒன்றிய ஆசிரிய ஒருங்கிணைப்பாளர் வீரமணி,எல்லைப்பட்டி தலைமை ஆசிரியை மற்றும் ஆசிரியர்கள் செல்வக்குமார்,இளையராஜா,மணிகண்டன் ,கட்டியாவயல் மற்றும் எல்லைப்பட்டி ஊர்ப் பொதுமக்கள் ஆகியோர் கலந்து கொண்டு விழாவினை சிறப்பித்தனர், விழாவிற்கான ஏற்பாடுகளை கட்டியாவயல் தன்னார்வலர் வினோதா,மீனாட்சி மற்றும் எல்லைப்பட்டி தன்னார்வலர் ஆதி திவ்யா ஆகியோர் செய்திருந்தனர்.

# திருமயம் அருகே உள்ள வீரமாகாளியம்மன் கோவில் பங்குனித் திருவிழா

திருமயம்,ஏப்.13–

புதுக்கோட்டை மாவட்டம் திருமயம் அருகே உள்ள வீரமாகாளியம்மன் கோவில் பங்குனித் திருவிழா வருடம் தோறும் விமர்சையாக நடைபெறுவது வழக்கம் அதேபோல இந்த பங்குனி திருவிழாவையொட்டி ஏராளமான பக்தர்கள் தங்களது நேர்த்தி கடன்களை பல விதங்களில் செலுத்தினர், இதில் பக்தர்கள் 15 நாட்களுக்கு முன்னரே விரதம் இருந்து, பால் குடங்கள் எடுத்தும், அழகு குத்தியும், தோள்களில் ஊசியில் எலுமிச்சம் பழங்களை குத்தியும் பக்தர்கள் தங்களது நேர்த்தி கடன்களை செலுத்தினர்



இதில் மேலூரில் அமைந்துள்ள வேங்கை அய்யனார் கோவிலில் இருந்து ஏராளமான பக்தர்கள் பால்குடங்கள் எடுத்தும், அலகு குத்தியும் சாமி ஆடிக்கொண்டும் ஊரை வலம் வந்து பின்னர் வீரமாகாளி அம்மன் கோவில் சென்றடைந்தனர், பின்னர் பக்தர்கள் கொண்டு வந்த பால்குடங்களிலிருந்து பாலைஎடுத்துஅம்மனுக்கு சிறப்பு அபிஷேகங்கள் மற்றும் தீபாராதனைகள் நடைபெற்றது. இந்த விழாவில் மேலூரை சுற்றியுள்ள சுற்றுவட்டார பகுதியில் இருந்து ஆயிரக்கணக்கானோர் கலந்து கொண்டு வீரமாகாளி அம்மன் அருள் பெற்றுச் சென்றனர்.



இந்திய விடுதலைப் போராட்டக் காலத்தில் வாழ்ந்தவர் ஜோதிபா கோவிந்த ராவ் புலே சமூக அவலங்களுக்கு எதிராகக் குரல் கொடுத்ததோடு அவற்றைக் களையும் முயற்சிகளிலும் இறங்கியவர். ஒடுக்கப்பட்டோர் மற்றும் பெண்களுக்கென்று பள்ளிகளை நடத்தியவர் ஆவார். ஜோதிராவ் புலேவின் 196வது பிறந்த நாள் காரைக்கால் மாவட்ட பாஜக ஓ.பி.சி அணி சார்பில் கொண்டாடப்பட்டது. காரைக்கால் புதிய பேருந்து நிலையத்தில் ஜோதிபா கோவிந்த ராவ் புலேவின் திருவுருவப்படம் வைக்கப்பட்டு படத்திற்கு மாலை அணிவித்து மலர் தூவி மரியாதை செலுத்தப்பட்டது இதில் பாஜக ஓபிசி அணி மாநில து.தலைவர் செல்வராஜ், அருள்முருகன், மாவட்ட தலைவர் துரைசேனாதிபதி உள்ளிட்ட 50க்கும் மேற்பட்ட பாஜகவினர் கலந்து கொண்டு ஜோதிராவ் புலேவின் உருவ படத்திற்கு மலர் தூவி மரியாதை செலுத்தினர்.

### அதிமுக உறுப்பினர் சேர்க்கை முகாமை

# மாவட்ட அவைத் தலைவரும் முன்னாள் சட்டமன்ற உறுப்பினருமான பி.வி பாரதி தொடங்கி வைத்தார்



சீர்காழி, ஏப். 13–

மயிலாடுதுறை மாவட்டம், சீர்காழி நகர் பகுதிகளுக்கான அதிமுக உறுப்பினர் சேர்க்கை முகாம் நகர செயலாளர் எல்.வி.ஆர். வினோத் தலைமையில் நடைபெற்றது.

நகராட்சிக்குஉட்பட்ட ஆறாவது வார்டில் தொடங்கிய உறுப்பினர் சேர்க்கை முகாமினை அதிமுக மாவட்ட அவை தலைவரும், முன்னாள் சட்டமன்ற உறுப்பினருமான பி.வி. பாரதி தொடங்கி வைத்தார். அதிமுக ஆறாவது வார்டு செயலாளர் பன்னீர்செல்வம், மகளிர் அணி நகரச் செயலாளர் லட்சுமி, அம்மா பேரவை நகர செயலாளர் ஏ.வி.மணி உள்ளிட்ட அதிமுக நகர நிர்வாகிகள் பலர் இதில் கலந்து கொண்டனர்.

அதிமுக உறுப்பினர் சேர்க்கை முகாமில் அதிக அளவு பெண்கள் ஆர்வமாக பங்கேற்று அதிமுகவில் புதிய உறுப்பினர்களாக தங்களை இணைத்துக் கொண்டனர். தொடர்ந்து நகரில் முகாம் அமைத்து புதிதாக ஐந்தாயிரம் உறுப்பினர்களை அதிமுகவில் சேர்க்க திட்டமிட்டுள்ளதாக அதிமுக நகர செயலாளர் வினோத் தெரிவித்தார்.

# பூவை எம்.மூர்த்தி பிறந்த நாளை முன்னிட்டு அம்பேத்கர் சிலைக்கு மாலை அணிவித்து இனிப்பு வழங்கப்பட்டது



ஊத்துக்கோட்டை, ஏப். 13 –

திருவள்ளூர் மாவட்டம், ஆண்டரசன் பேட்டையில் புரட்சி பாரதம் கட்சியின் நிறுவனர் எம்.மூர்த்தியின் 71 ஆம் ஆண்டுபிறந்த நாள்விழா நேற்று கொண்டாடப்பட்டது.

வண்ண வண்ண மலர்களால் அலங்கரிக்கப்பட்ட மூர்த்தியின்உருவப்படத்துக்கு புரட்சி பாரதம் கட்சியின் தலைவரும் கே.வி.குப்பம் சட்டமன்றத் தொகுதியின் உறுப்பினருமான பூவை எம்.ஜெகன் மூர்த்தி வழிகாட்டுதலின்படி புரட்சி பாரதம் கட்சியின் மாநில, மாவட்ட, ஒன்றிய, கிளை நிர்வாகிகள் மாலை அணிவித்து மரியாதை செலுத்தினர். இதன் பின்னர், பொதுமக்களுக்கு அன்னதானம், இனிப்பு உள்ளிட்டவைகளை வழங்கினர்.

எல்லாபுரம் ஒன்றியம், அழிஞ்சிவாக்கம் ஊராட்சியில் பூவை எம்.மூர்த்தியின் பிறந்தநாளை முன்னிட்டு அம்பேத்கர் சிலைக்கு மாலை அணிவித்து பொது மக்களுக்கு இனிப்பு வழங்கும் நிகழ்ச்சி நடைபெற்றது. எல்லாபுரம் கிழக்கு ஒன்றிய பொருளாளர் அழிஞ்சிவாக்கம் பிரகாஷ் தலைமையில் அழிஞ்சிவாக்கம் ஊராட்சியில் பூவை எம். மூர்த்தியின் பிறந்தநாள் விழா கொண்டாடப்பட்டது.

இந்நிகழ்ச்சியில், ஊராட்சி மன்றத் தலைவர் கே.சுதாகர், இ.மேகநாதன், வார்டு உறுப்பினர் கே.கதிர்வேல், கிளைத் தலைவர் ஜி.முருகன், கிளை பொருளாளர் ஆர்.சம்பத் உள்ளிட்ட ஏராளமானோர் கலந்து கொண்டனர். நிகழ்ச்சிக்கான ஏற்பாடுகளை புரட்சி பாரதம் கட்சியின் எல்லாபுரம் கிழக்கு ஒன்றிய நிர்வாகிகள் செய்திருந்தனர்.

# காரைக்காலில் இருந்து கார் மூலம் சாராய முட்டைகள் கடத்தல் இருவர் கைது, கார் பறிமுதல்



காரைக்கால்,ஏப்,13

காரைக்கால் மாவட்டம்கோட்டுச்சேரி பகுதியில் இருந்து தமிழக பகுதியான நாகூருக்கு சாராய முட்டைகளை காரில் இருவர் கடத்தி செல்வதாக குற்ற பிரிவு போலீசாருக்கு ரகசிய தகவல்கிடைத்ததுதகவலை அடுத்து திருப்பட்டினம் வட்ட ஆய்வாளர் லெனின்பாரதி உதவி ஆய்வாளர் சுரேஷ் தலைமையிலான குற்றப்பிரிவு போலீசார் காரைக்காலில் எல்லை பகுதியான கீழவாஞ்சூரில் காத்திருந்தனர்.

அப்போது அந்தப் பகுதியாக வந்த சந்தேகத்திற்கு இடமான காரை மறித்து விசாரித்த போது காரில் இருந்த இருவரும் முன்னுக்குப் பின் முரணாகபேசியதில் சந்தேகம் அடைந்த போலீசார் காரை சோதனையிட்டனர் அப்போது காரில் பதுக்கி வைக்கப்பட்டிருந்த ரூபாய் ஒரு லட்சத்து 20 ஆயிரம் மதிப்பிலான சாராய முட்டைகளை கண்டுபிடித்தனர்.

இருவரையும் விசாரித்ததில் இருவரும் காரைக்கால் மாவட்டம் தலத்தெரு காளியம்மன் கோவில் தெருவை சேர்ந்த ராஜா மற்றும் சத்யராஜ் என்பது தெரியவந்தது. இதனை அடுத்து இருவர் மீதும் வழக்கு பதிவு செய்து அவர்களிடம் இருந்த ஒரு லட்சத்து 20 ஆயிரம் மதிப்பிலான சாராய மூட்டைகள் மற்றும் அவர்கள் கடத்த பயன்படுத்திய கார் உள்ளிட்டவற்றை பறிமுதல் செய்துள்ளனர்.

# ஸ்ரீ வரதராஜ சுவாமி கோவிலில் நடைபெற்ற வையாளி சேவை விழா: திரளான பக்தர்கள் கலந்து கொண்டனர்





திருவள்ளூர், ஏப். 13 –

திருவள்ளூர் மாவட்டம், எல்லாபுரம் ஒன்றியம், கொசவன்பேட்டை கிராமம், பிள்ளையார் கோவில் தெரு, பெருமாள் கோவில் தெருவில் ஸ்ரீ வரதராஜ சுவாமி திருக்கோவில் உள்ளது. இக்கோவில்களில் ஸ்ரீ ராமநவமி மகோத்சவ விழா மற்றும் ஸ்ரீ தியாகபிரம்ம 70–வது ஆண்டுவிழா நிகழ்ச்சிகள் கடந்த 30 ஆம் தேதி பந்தக்கால் நிகழ்ச்சியுடன் துவங்கி நடைபெற்றது.

இதைத் தொடர்ந்து ஸ்ரீ சீதாராம திருக்கல்யாணம், ஸ்ரீ ராமர் பட்டாபிஷேகம், வசந்த உற்சவம் உள்ளிட்ட விழாக்கள் நடைபெற்று வந்தது. மேலும் விஷ்ணு சகஸ்ரநாம பாராயணம், அன்னதானம் உள்ளிட்டவை நடைபெற்றது.

இந்நிகழ்ச்சிகளின் முத்தாய்ப்பாக 12–வது நாளில் வையாளி சேவை நிகழ்ச்சி நடைபெற்றது. மேலும் சிறப்பு நாதஸ்வர கச்சேரி, பஜனை, சங்கீத பாட்டு கச்சேரி, ஆரணி எம்.பி.எஸ் விவேகானந்தா பிரைமரி அண்ட் நர்சரி பள்ளி மாணவர்களின் பல்வேறு கலை நிகழ்ச்சிகள் நடைபெற்றது.

இந்நிகழ்ச்சிக்கு, பி.ஜெகதீஸ்வரய்யா, இ.எஸ்.முரளி கிருஷ்ணா, பி.பிரபாகர், பி.எஸ்.நாகராஜ், என்.சி.மோகனகிருஷ்ணா, வி.சி.முரளி கிருஷ்ணா ஆகியோர் தலைமையில் வி.ஈஸ்வரய்யா ஏற்பாடுகளை செய்திருந்தார். இதன் பின்னர் சுவாமி திருவீதி உலா வரும் நிகழ்ச்சி நடைபெற்றது. 12 நாட்கள் நடைபெற்ற விழாவிற்கான நிகழ்ச்சி ஏற்பாடுகளை ஸ்ரீ தியாக பிரம்ம சங்கீத சபையினர் செய்திருந்தனர்.



▶ காரைக்கால் வடக்கு கோவில் பத்து பகுதியில் வசிக்கும் சமூக சேவகியும், கவிஞர் அ.கனகவள்ளி இப்பகுதியில் உள்ள நரிக்குறவர் இன மாணவர்களிடம் கல்வியின் அவசியத்தை வலியுறுத்தியும் கல்வியில் இடைநிற்றலை தவிர்த்து தொடர்ந்து கல்வி கற்றிடவும்,திருக்குறளை கற்றால் வாழ்வியல் நெறிகளை தெரிந்து கொள்ளலாம் என்றும், கொரோனா காலகட்டம் நெருங்கி வருவதால் அனைவரும் முகக் கவசம் அணிய வேண்டும் என்பது வலியுறுத்தியும், தபால் கார்டில் அனைவரும் எழுத பழக வேண்டும் என்றும் அனைத்து அவசியத்தையும் வலியுறுத்தி ஒரு வாரம் தொடர்ந்து மாலை நேரத்தில் பயிற்சியளித்தார். இதனை நரிக்குறவர் மாணவர்கள் சாதனை முயற்சியாக மேற்கொள்ள வேண்டும் என்று வலியுறுத்தியதால் ஆல் இந்தியா புக் ஆப் ரெக்கார்ட்ஸ் ஹோல்டர் சே.வே வெங்கடேசன் தலைமையிலும் ஆல் இந்தியா புக் ஆப் ரெக்கார்ட்ஸ் கண்காணிப்பாளர் கலைவாணி முன்னிலையிலும் திருக்குறளை தபால் கார்டில் எழுத வைத்து இதனை சாதனை முயற்சியாக மேற்கொண்டார். இதனை இப்பகுதி மக்கள் மகிழ்ச்சியோடு பாராட்டினர்.



▶ காரைக்கால் மாவட்டம் நெடுக்காட்டில் இயங்கி வரும் டொமினிக் சேவியோ மேல்நிலை பள்ளியில் 37–ஆவது ஆண்டு விழா மற்றும் விளையாட்டு விழா அன்னவாசலில் அமைந்துள்ள கொக்கலவாடி திடலில் நடைபெற்றது. இந்நிகழ்வில் காரைக்கால் மாவட்ட ஆட்சியர் குலோத்துங்கன் கலந்துகொண்டு தேசிய கொடியை ஏற்றி வைத்து விழாவினை துவக்கி வைத்தார். இந்நிகழ்வில் பேசிய மாவட்ட ஆட்சியர் மாணவர்கள் விளையாட்டில் தனி கவனம் செலுத்த வேண்டும் என்றும் கல்வியில் சிறந்து விளங்குவது போன்று விளையாட்டிலும் மாணவர்கள் சிறந்து விளங்க வேண்டும் எனவும் பெற்றோர்கள் இதற்கு உறுதுணையாக இருக்க வேண்டும் என்றும் மாணவர்கள் மற்றும் பெற்றோர்களை ஆட்சியர் கேட்டுக் கொண்டார். மேலும் விளையாட்டின் முக்கியத்துவம் குறித்தும் மாணவர்களிடையே ஆட்சியர் கலந்துரையாடினார். மேலும் இவ்விழாவில் வெற்றி பெற்ற மாணவர்களுக்கு பரிசுகளை வழங்கி மாணவர்களை ஆட்சியர் ஊக்குவித்தார். இந்நிகழ்வில் பள்ளி முதல்வர் மற்றும் ஆசிரியர்கள் மாணவர்கள் கலந்து கொண்டனர்.



▶ காரைக்கால் மாவட்ட ஆட்சியர் குலோத்துங்கன் தலைமையில் ஆட்சியரகத்தில் பணிபுரியும் அரசு அதிகாரிகள் மற்றும் அலுவலர்களுடன் கலந்தாய்வுக் கூட்டம் நேற்று காலை நடைபெற்றது. முதலில் அவரவர்கள் செய்யும் பணிகள் குறித்து கேட்டறிந்த ஆட்சியர் அதிகாரிகள் மற்றும் அலுவலர்கள் குறித்த நேரத்தில் பணிக்கு வர வேண்டும் என்றும் ஆட்சியரகத்தில் பணிபுரிபவர்கள் மற்ற துறையினருக்கு முன்னுதாரணமாக திகழ வேண்டும் என்றும் கேட்டுக் கொண்ட ஆட்சியர் அவர்கள் நேரடியாக என்னை வந்து சந்திக்கும் பொது மக்களுடைய குறைகள் மற்றும் எழுத்துப்பூர்வமாக வரும் குறைகளை 15 நாட்களுக்குள் நிவர்த்தி செய்யும் படியும் ஆட்சியர் அவர்கள் கேட்டுக் கொண்டார். மேலும் மத்திய மாநில அரசுகளின் திட்டங்கள் பொதுமக்களுக்கு சென்றடையும் வகையில் உடனுக்குடன் செய்து முடிக்க வேண்டும் என்றும் அலுவலர்களை ஆட்சியர் கேட்டுக் கொண்டார், இந்நிகழ்வில் துணை மாவட்ட ஆட்சியர் பாஸ்கரன் இலநிலை கணக்கு அதிகாரி மற்றும் ஆட்சியரின் செயலர் மேலும் அலுவலர்கள் இந்நிகழ்வில் கலந்து கொண்டார்கள்.

# மாம்பாக்கம் கிராமத்தில் வயிற்று வலியால் அவதிப்பட்டவர் மயங்கி விழுந்து பலி

திருவள்ளூர், ஏப். 13–

திருவள்ளூர் மாவட்டம், பூண்டி ஒன்றியம், மாம்பாக்கம் கிராமத்தைச் சேர்ந்த மெயின் ரோடு பகுதியில் வசித்து வந்தவர் விஷ்ணு (வயது23). இந்த வாலிபருக்கு கடந்த 9 ஆம் தேதி மாலை வயிற்று வலி ஏற்பட்டது.

எனவே ஊத்துக்கோட்டை அருகே உள்ள கட்சூர் அரசு ஆஸ்பத்திரிக்கு சென்று சிகிச்சை பெற்று வீடு திரும்பினார். அன்று நள்ளிரவு சிறுநீர் கழிக்க வீட்டுக்கு வெளியே எழுந்து சென்றுள்ளார். அப்பொழுது அங்கே மயங்கி கீழே விழுந்தார்.

அவரை மீட்டு திருவள்ளூர் அரசு ஆஸ்பத்திரிக்கு கொண்டு சென்று அனுமதித்தனர். அங்கு அவரை பரிசோதித்த டாக்டர்கள் அவர் ஏற்கனவே இறந்து விட்டதாககூறினர். இந்த சம்பவம் குறித்து நேற்று அவரது தந்தை கோபால் பெரியபாளையம் காவல் நிலையத்தில் புகார் செய்தார். எனவே போலீசார் வழக்கு பதிவு செய்து இந்த சம்பவம் குறித்து பல்வேறு கோணங்களில் விசாரணை செய்து வருகின்றனர்.

**கனம் வருவாய் கோட்டாச்சியர் அவர்கள் புதுக்கோட்டை**

**ந. க. அ6/5311/2022**

நாள்:17-05-2022

**திரு.மாரிமுத்து, த/பெ. மருதன்,** அரிசினத் தெரு-குருவாண்டான் தெரு. கல்லாக்கோட்டை(PO), கந்தர்வக்கோட்டை(TK). புதுக்கோட்டை (DT).

மனுதாரர்

எதிர்

வட்டாச்சியர், வட்டாச்சியர் அலுவலகம், கந்தர்வக்கோட்டை.

–எதிர்மனுதாரர்

**அறிவிப்பு**

மேற்படி **மனுதாரர் மாரிமுத்து அவர்களின் தகப்பனார் மருதன்** என்பவர் கடந்த 05.06.1999 ஆம் வருடம் மேலே கண்ட முகவரியில் இறந்துவிட்டார். அவரது இறப்பை எதிர் மனுதாரர் அலுவலகத்தில் பதிவு செய்ய உத்தரவிட கோரி மனுதாக்கல் செய்யப்பட்டுள்ளது. மனுதாரரின் தகப்பானார் மருதன் என்பவரின் இறப்பை பதிவு செய்வதில் யாருக்கேனும் ஆட்சேபனை இருப்பின் பதினைந்து தினங்களுக்குள் மேற்படி புதுக்கோட்டை வருவாய் கோட்டாச்சியர் அலுவலகத்தில் ஆஜராகி தெரிவித்துக் கொள்ளலாம் என இதன் மூலம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

**ம.மாரிமுத்து**

**செல் : 8489658690**

**மனுதாரர்**

### காந்திஜி மது போதை மறுவாழ்வு மையம் சார்பாக

# காரைக்காலில் மாணவர்களுக்கும் பொது மக்களுக்கும் பல்வேறு விழிப்புணர்வு





காரைக்கால் , ஏப். 13–

காந்திஜி மது போதை மறுவாழ்வு மையம் சார்பாக காரைக்காலில் மாணவர்களுக்கும் பொது மக்களுக்கும் பல்வேறு விழிப்புணர்வு நிகழ்வுகளை நடத்தி வருவதன் ஒரு பகுதியாக காரைக்காலில் தஞ்சாவூர் பெரியார் மணியம்மை பல்கலைகழகம் மற்றும் காத்திஜி மதுபோதை மறுவாழ்வு மையம் இணைந்து அறிஞர் அண்ணா அரசு கலை மற்றும் அறிவியல் கல்லுரியில் "போதை இல்லா இந்தியா" என்ற தலைப்பில் மாணவர்களுக்கு கையெழுத்து இயக்கம் நடத்தப்பட்டது.

இந்நிகழ்ச்சியில் சிறப்பு விருந்தினர்களக அறிஞர் அண்ணா அரசு கல்லூரியின் முதல்வர் முகமது ஆசாத் ராஜா, வழக்கறிஞர் சங்கரி குழந்தை நல குழும ஊறுப்பினர் , அண்ணா கல்லூரியின் சமூக பணித்துறை தலைவர் சிவக்குமார் மற்றும் காந்திஜி மதுபோதை மறுவாழ்வு மையத்தின் திட்ட ஒருங்கிணைப்பாளர் ராஜேஸ்வரி, பேராசிரியர் ஜெகதீசன் கலந்து கொண்டனர்.

சிறப்பு விருந்தினர்கள் அனைவரும் மாணவர்களுக்கு போதை ஒழிப்பு சம்பந்தமான விழிப்புணர்வுகளை வழங்கினார். மேலும் மாணவர்கள் படிப்பு ஒன்றிய குறிக்கோளாக கொள்ள வேண்டும் என்றும் போதைப் பழக்கத்திற்கு ஆளாக கூடாது என்றும் கல்லூரி முதல்வர் உட்பட சிறப்பு விருந்தினர் அனைவரும் மாணவர்களிடம் சொற்பொழிவு ஆற்றினார். கையெழுத்து இயக்கத்தை கல்லூரியின் முதல்வர் துவக்கி வைத்தார். தொடர்ச்சியாக சிறப்பு விருந்தினர்களும், மாணவர்களும் கையெழுத்து இயக்கத்தில் கையொப்பமிட்டனர்.

மேலும் தஞ்சாவூர் பெரியார் மணியம்மை பலகலைக்கழகத்தின் சமூக பணத்துறை மாணவி திவ்யா சிறப்பு விருந்தினர்களை வரவேற்று நிகழ்ச்சியை தொகுத்து வழங்கிணார்.

# செம்பனார்கோவில் தெற்கு ஒன்றியத்தில் திமுகவில் ஒரு கோடி உறுப்பினர்கள் சேர்க்கும் பணி



தரங்கம்பாடி, ஏப். 12 –

மயிலாடுதுறை மாவட்டம், பூம்புகார் சட்டமன்ற தொகுதி செம்பனார்கோவில் தெற்கு ஒன்றியத்தில் திமுக தலைவரும் தமிழ்நாட்டின் முதலமைச்சருமான மு.க.ஸ்டாலின் ஆணைக்கிணங்க முத்தமிழ் அறிஞர் கலைஞரின் நூற்றாண்டு விழா மற்றும் திமுக பவள விழா ஆண்டுக்காக புதிதாக ஒரு கோடி உறுப்பினர்கள் சேர்க்கும் பணி பூம்புகார் சட்டமன்ற உறுப்பினரும், மயிலாடுதுறை மாவட்ட செயலாளருமான நிவேதா எம். முருகன் அறிவுறுத்தலின்படி நடைபெற்று வருகிறது.

அந்த வகையில் நெடுவாசல் மற்றும் கூடலூர் ஊராட்சிகளில் செம்பனார்கோவில் தெற்கு ஒன்றிய செயலாளர் எம். அப்துல்மாலிக் தலைமையில் முகாம் அமைத்து வீடு வீடாக சென்று திண்ணைப் பிரச்சாரம் செய்து துண்டுப் பிரசுரம் வழங்கி புதிய உறுப்பினர்கள் சேர்க்கும் பணி நடைபெற்றது.

இதில், ஒன்றிய பொருளாளர் ரெங்கராஜ், மாவட்ட பிரதிநிதிகள் கே.பி.ராஜா, கே.எஸ்.எஸ். கருணாநிதி, நெசவாளர் அணி அமைப்பாளர் ராமகிருஷ்ணன், ஊராட்சி மன்ற தலைவர்கள் உமாராணி, பைலட், நிர்வாகிகள் பெரிய தம்பி, சிவா, பாலமுருகன் மற்றும் கிளை செயலாளர்கள் உள்ளிட்ட பலர் உடன் இருந்தனர்.

# எங்களை விவசாயம் செய்யவிடுங்கள் ஐயா பயிர்களை சேதப்படுத்திய வனத்துறையினர்

## கதறி கண்ணீர் விடும் விவசாயிகள்!



சீர்காழி, ஏப். 13 –

மயிலாடுதுறை மாவட்டம், கொள்ளிடத்தை அடுத்த கொள்ளிட ஆற்றின் கரையோர பகுதியில் அமைந்துள்ளது காடுவெட்டி கிராமம். இங்கு சுமார் நூற்றுக்கும் மேற்பட்ட ஆதிதிராவிடர் மக்கள் நூறு ஆண்டுகளுக்கும் மேலாக வசித்து வருகின்றனர்.

இவர்கள் காவிரி ஆற்றுப்படுகையில் அமைந்துள்ள வெள்ளைமணல் கிராமத்தில் உள்ள கொள்ளிடம் ஆற்று புறம்போக்கு நிலத்தில் தலைமுறை தலைமுறையாக விவசாயம் செய்து வாழ்வாதாரத்தை காத்து வருகின்றனர்.

அந்த இடத்திற்கு பல ஆண்டுகளாக வரி செலுத்தியும் வந்துள்ளனர். காலப்போக்கில் அந்த நிலத்திற்கு வரி வசூல் செய்வதை அரசு நிறுத்தி விட்டதாகவும், கடந்த சில ஆண்டுகளாக தங்களை அப்பகுதியில் விவசாயம் செய்ய வனத்துறை அதிகாரிகள் அனுமதிக்காமல், விவசாயம் செய்ய செல்லும் தங்களை அடித்து விரட்டி, துன்புறுத்துவது மட்டுமின்றி தங்கள் மீது பொய் வழக்கு பதிவு செய்வது, அந்த இடம் தொடர்பாக எங்களை மிரட்டி கையெழுத்து வாங்கிக் கொண்டு காலி செய்யுமாறு கூறி பல்வேறு இன்னல்களை கொடுத்து வருகின்றனர்.


இதுதொடர்பாக அரசு அதிகாரிகளுக்கும், முதல்வரின் தனி பிரிவு என பல்வேறு மனுக்கள் அளிக்கப்பட்டும், எந்த தீர்வும் ஏற்படவில்லை என வேதனை தெரிவிக்கும் அப்பகுதி ஏழை விவசாய குடும்பத்தினர், தமிழக முதல்வர் இதனை கவனத்தில் எடுத்து தலைமுறை தலைமுறையாக விவசாயம் செய்து வந்த எங்களுக்கு அந்த நிலத்தில் மீண்டும் விவசாயம் செய்ய அனுமதி வழங்க வேண்டும் என கோரிக்கை விடுத்து வருகின்றனர்


இந்நிலையில், அங்கு விவசாயிகள் பருத்தி சாகுபடி செய்துள்ளனர். இதனை கண்ட சீர்காழி வனத்துறையினர் அங்கு வேலிகளை பிரித்தெறிந்தும், செடிகளை பிடிங்கியும் பாழாக்கியுள்ளனர்.

மேலும் இதனை கண்டு பரிதவித்து வனத்துறை அலுவலர்களிடம் கேட்டதற்கு, அரசு ஊழியர்களை பணி செய்ய விடாமல் தடுத்ததாக கூறி பொய்வழக்கு பதிவு செய்துள்ளதாகவும் அப்பகுதி ஏழை விவசாயிகள் கண்ணீர் மல்க வேதனை தெரிவித்துள்ளனர்.

தொடர்ந்து வனத்துறையினரால் பாதிப்புக்குள்ளாகும் தங்களை அரசு காக்க வழிவகை செய்ய வேண்டும் எனவும் அவர்கள் கதறி கண்ணீர் விட்டு வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

# அருள்மிகு ஸ்ரீ சேணியம்மன் ஆலய அஷ்டபந்தன மகா கும்பாபிஷேக விழா





சென்னை , ஏப். 13–

தாம்பரத்தை அடுத்த பழைய பெருங்களத்தூரில் எழுந்தருளி அருள் பாலித்து வரும், ஆயிரம் ஆண்டுகள் பழைமையான, அருள்மிகு ஸ்ரீ சேணியம்மன் ஆலய அஷ்டபந்தன மகா கும்பாபிஷேக விழா வெகு விமரிசையாக நடைபெற்றது. கும்பாபிஷேக நன்னீராட்டுதல் விழாவினை தொடர்ந்து அலங்கார ஆராதனை, தீபாராதனை, மஹாபிஷேகம், தீர்த்த பிரசாதம் வழங்குதல் ஆகிய நிகழ்ச்சிகளும் அதனைத் தொடர்ந்து சிறப்பு அன்னதானம் வழங்கும் நிகழ்ச்சியும் நடைபெற்றது.

இவ்விழாவில் சிறப்பு அழைப்பாளராக தாம்பரம் மேயர் வசந்தகுமாரி கமலக்கண்ணன், துணை மேயர் ஜி.காமராஜ் ஆகியோர் கலந்துகொண்டு சிறப்பித்தனர். மேலும் விழாவுக்கான அனைத்து ஏற்பாடுகளையும் ஆலய நிர்வாகிகள் சேது மாதவன், மதியழகன், பிரேம்குமார், குணசேகரன், இ.யுவராஜ், கிருஷ்ணமூர்த்தி, தயாளன், சி.யுவராஜ், ஏழுமலை, கஜேந்திரன், லோகநாதன், ஜோதிபிரகாசம், சுப்பிரமணி, உலகநாதன், அருள், கர்னல் மற்றும் கும்பாபிஷேக விழா குழுவினர் சிறப்பாக செய்திருந்தனர்.

# "எதிர்க்கட்சிகளை ஒருங்கிணைக்கும் வரலாற்றுத் தருணம்"

## ராகுல், நிதிஷ் சந்திப்பு பற்றி கார்கே கருத்து



புதுடெல்லி ,ஏப்.13-

டெல்லியில் ஐக்கிய ஜனதா தள கட்சித் தலைவர் நிதிஷ் குமாரும், காங்கிரஸ் கட்சியின் மூத்தத் தலைவர்களும் நேற்று சந்தித்துக் கொண்டனர். இதில் ராகுல் காந்தி, காங்கிரஸ் கட்சியின் தலைவர் மல்லிகார்ஜுன கார்கே, பிஹார் முதல்வரும் ஐக்கிய ஜனதா தள கட்சியின் தலைவருமான நிதிஷ் குமார், பிஹார் துணை முதல்வரும் ராஷ்ட்ரீய ஜனதா தள கட்சியின் சேர்மன் தேஜஸ்வி யாதவ், ஐக்கிய ஜனதா தள தலைவர் ராஜீவ் ரஞ்சன் சிங், ஆர்ஜேடி ராஜ்யசபா எம்.பி. மனோஜ் குமார் ஜா மற்றும் காங்கிரஸ் மூத்த தலைவர் சல்மான் குர்ஷித் ஆகியோர் கலந்து கொண்டனர்.

இதையடுத்து, ஊடகங்களுக்குப் பேட்டியளித்த கார்கே, "வரவிருக்கும் 2024 நாடாளுமன்றத் தேர்தலில் அனைத்து எதிர்க்கட்சிகளையும் ஒருங்கிணைக்க முடிவு செய்துள்ளோம். அதற்கான வரலாற்று சிறப்புமிக்க முதல் அடி இது. இது ஆரம்பமே. இது தேசத்திற்கான எதிர்க்கட்சிகளின் பார்வையை கட்டமைக்கும்" என்றார்.

பிஹார் முதல்வர் நிதிஷ் குமார் கூறுகையில், "டெல்லிக்கு வந்ததே எதிர்க்கட்சிகளை ஒருங்கிணைக்கும் முயற்சிதான். எவ்வளவு கட்சிகளை ஒருங்கிணைத்து வேலை செய்ய முடியுமோ அதனை சாத்தியப்படுத்துவோம்" என்றார். முன்னதாக நிதிஷ் குமார், ஆர்ஜேடி தலைவர் லாலுவை அவரது இல்லத்திற்கு சென்று சந்தித்து வந்தார்.

2024 நாடாளுமன்றத் தேர்தல் நெருங்கும் சூழலில் எதிர்க்கட்சிகள் ஒரே அணியில் இணைவதில் ஆர்வம் காட்டி வருகின்றன. சில கட்சிகள் தன்முனைப்பாக பேச்சுவார்த்தையை முன்னெடுக்க சில கட்சிகள் விலகி நிற்கின்றன. திரிணமூல் காங்கிரஸ் கட்சி நாடாளுமன்றத் தேர்தலை தனியாகவே சந்திக்கும் என்று கூறியுள்ளது. ஆனால் ராகுல் காந்தி தகுதியிழப்பு சம்பவத்திற்குப் பின்னர் திரிணமூல் தனது நிலைப்பாட்டை சற்றே தளர்த்தியிருந்தாலும் கூட அது ஆதரவாக மாறுமா என்பதைப் பொறுத்திருந்தே பார்க்க வேண்டும்.

அதேபோல், தெலங்கானாவின் பாரத் ராஷ்டிர சமிதி கட்சி எதிர்க்கட்சிகள் ஒன்றிணைய வேண்டும் என விருப்பம் தெரிவித்துள்ளது. ஆனால், அதன் தலைவர் டி.சந்திரசேகர ராவ் அந்த அணியில் காங்கிரஸ் கட்சி இடம்பெற விரும்பவில்லை என்பதை வெளிப்படையாகவே பலமுறை கூறிவிட்டார்.

வேலைவாய்ப்பின்மை, பணவீக்கம் குறித்து மத்திய பட்ஜெட்டில் நிதியமைச்சர் எதுவுமே குறிப்பிடவில்லை. இந்தியாவில் இந்த பிரச்சினைகளே இல்லை என்ற வகையில் மத்திய அரசு செயல்படுகிறது. ஆனால் பால், காய்கறிகள், முட்டை, சமையல் எண்ணெய், சமையல் காஸ் உள்ளிட்ட அத்தியாவசிய பொருட்களின் விலை கணிசமாக உயர்ந்து வருகிறது. பெரும் எண்ணிக்கையிலான இளைஞர்கள் வேலையில்லாமல் தவிக்கின்றனர். 2022-ம் ஆண்டுக்குள் விவசாயிகளின் வருவாய் இரட்டிப்பாகும் என்று அளிக்கப்பட்ட வாக்குறுதியை நிறைவேற்றவில்லை. மத விழாக்களை பயன்படுத்தி கலவரங்கள் நடத்தப்படுகின்றன. ஆனால் பிரதமர் நரேந்திர மோடி மவுனம் காக்கிறார். சீனாவுடனான எல்லைப் பிரச்சினை குறித்து நாடாளுமன்றத்தில் விவாதம் நடத்த மத்திய அரசு மறுத்து வருகிறது.

அடுத்த சில மாதங்கள் ஜனநாயகத்துக்கு சோதனையான காலமாக இருக்கும். பல்வேறு மாநிலங்களில் நரேந்திர மோடி அரசு தனது அதிகாரத்தை துஷ்பிரயோகம் செய்யக்கூடும். நாட்டின் அனைத்து பிரச்சினைகளையும் மக்கள் மன்றத்துக்கு காங்கிரஸ் கொண்டு செல்லும். இந்திய அரசமைப்பு, மக்களின் குரலை காக்க காங்கிரஸ் தொடர்ந்து போரிடும். பிரதான எதிர்க்கட்சி என்ற பொறுப்புணர்வு எங்களுக்கு இருக்கிறது. அந்த வகையில் ஜனநாயகத்தை காப்பாற்ற ஒத்த கருத்துடைய கட்சிகளுடன் கூட்டணி அமைக்க காங்கிரஸ் தயாராக உள்ளது" என்று சோனியா காந்தி கூறியிருந்தது குறிப்பிடத்தக்கது.

# தென்காசி மாவட்டம் புளியங்குடியில் பங்குனி மாத திருவிழா கொடியேற்று நிகழ்ச்சி



தென்காசி, ஏப்.13-

தென்காசி மாவட்டம் புளியங்குடியில் அருள்மிகு அகத்தீஸ்வரர், ஸ்ரீலோக முத்திர அம்பாள் திருக்கோயில் பங்குனி மாத காட்சி திருவிழா, கொடியேற்று விழா முதல் நாள் அபிஷேகம் தீபாராதனை சுவாமி அம்பாள் சப்பரம் திருவீதி உலாவும், 3-ம் திருவிழா அகத்தியர் தேவாரப் பாட்டு பாராயணம் திருவிளக்கு பூஜை பி.பி.கே.பிச்சையா செங்குந்தர் தென்காசி மாவட்ட பொருளாளர் தென்னிந்திய செங்குந்தர் மகாஜன சங்கம் விழாவும், 4-ம் நாள் ஆன்மீக சொற்பொழிவு மணிமாறன் ஆன்மீக அமுதம் என்ற தலைப்பில் சொற்பொழிவும், 6-ம் நாள் தீபாராதனை திருக்குற்றாலம் நந்தனார் சிவபாத கான நாத கைலாய வாத்தியமும் முழங்க சுவாமி அம்பாள் ரிஷப வாகனத்தில் வீதி உலா, 7-ம் நாள் மண்டகப்படி விநாயகர் கோவில் தெரு டி.என்.புதுக்குடியில் ஸ்ரீ லோகமித்ரா சமதே, ஸ்ரீ அகஸ்தியர் சுவாமி அழைப்பு, அம்பாள் வீதி உலா, 8-ம் நாள் பால்குடம் அழைப்பு அபிஷேகம் ஸ்ரீ பரமேஸ்வரர் பார்வதி அம்பாள் திருக்கல்யாணம் மற்றும் தீபாராதனைகளும் நடைபெற்றது.

சுவாமி அம்பாள் காட்சிக்கு எழுந்தருளல், அகஸ்தியர் லோக முத்ரா அம்மாவுக்கு ஸ்ரீ பரமேஸ்வரர் பார்வதி ரிஷப வாகனத்தில் திருமணக் காட்சி திருவிழா மற்றும் அன்னதானமும் நிகழ்ச்சி ஏற்பாடு புளியங்குடி நகர மன்ற உறுப்பினர் வள்ளி அண்ணாமலை, செங்குந்தர் முதலியார் சமுதாயம், அறிஞர் அண்ணா பேரவை, இளைஞர் அணி சிறப்பான ஏற்பாடு செய்யப்பட்டது இதில் ஆயிரக்கணக்கான பக்தர்கள் சுவாமி தரிசனம் செய்தனர்.

# ஆவுடையார்கோவில் வட்டாட்சியர் அலுவலகம் முன்புசாலை மறியல்




ஆவுடையார்கோவில், ஏப்.13-

புதுக்கோட்டை மாவட்டம் அறந்தாங்கி தொகுதிக்கு உட்பட்ட ஆவுடையார்கோவில் வட்டாட்சியர் அலுவலகம் முன்பு அறந்தாங்கி - மீமிசல் செல்லும் சாலையில் 300க்கும் மேற்பட்ட பொதுமக்கள் சாலை மறியலில் ஈடுபட்டனர், இதனால் 2 மணி நேரம் போக்குவரத்து பாதிக்கப்பட்டது.

கடந்த 15 தினங்களுக்கு முன்பு ஆவுடையார்கோவில் பகுதியை சேர்ந்த மாணிக்கம் என்பவரை அதே ஆவுடையார்கோவில் பகுதியை சேர்ந்த எம். எஸ் .கே.பழனிஸ்ரீராம், தீபக் , சந்தான பிச்சை ஆகிய மூவரும் சேர்ந்து கொலைவெறி தாக்குதல் நடத்தி மாணிக்கம் என்பவர் உயிருக்கு போராடிய நிலையில் தனியார் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு தற்போது மருத்துவமனையில் சிகிச்சையில்உள்ளார், அவரை தாக்கிய நபர்கள் மூவர் மீதும் ஆவுடையார்கோவில் காவல்துறையினர்.வழக்கு பதிவு செய்தும் அந்த குற்றவாளி மூவரையும் காவல்துறையினர் இன்று வரை கைது செய்யவில்லை, அதேபோல் அவர்கள் மீது பல்வேறு வழக்குகள் நிலுவையில் உள்ளதால் அவர்களை குண்டர் தடுப்பு சட்டத்தில் கைது செய்யக்கோரி பொதுமக்கள் ஆவுடையார்கோவில் வட்டாட்சியர் அலுவலகம் முன்பாக மறியல் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

உடனே அங்கு வந்த அறந்தாங்கி டிஎஸ்பி தினேஷ்குமார் மற்றும் ஆவுடையார்கோவில் வட்டாட்சியர் மார்ட்டின் லூதர் கிங் ஆகியோர் மறியல் போராட்டத்தில் ஈடுபட்ட மக்களை அழைத்துப்பேசினர், முதலில் சாலை மறியலை கைவிட மறுத்த அவர்கள் ஐந்து தினங்களுக்குள் குற்றவாளிகளை கைது செய்வதாக வாக்குறுதி அளித்ததின் விளைவாக மறியலை கைவிட்டு களைந்து சென்றனர், இதனால் இரண்டு மணி நேரம் போக்குவரத்து பாதிப்புக்கு உள்ளானது.



மதுரை தெற்கு மாவட்ட இளைஞர் அணி சார்பாக, அதன் துணை அமைப்பாளர் விமல் ஏற்பாட்டில் திமுக தலைவரும், தமிழ்நாடு முதலமைச்சருமான மு.க.ஸ்டலின் திமுக இளைஞர் அணி செயலாளர், விளையாட்டு மேம்பாட்டு துறை அமைச்சர் உதயநிதி ஆணைக்கிணங்க மதுரை தெற்கு மாவட்ட திமுக செயலாளர் சேடப்பட்டி மு.மணிமாறன் திருப்பரங்குன்றம் 16 கால் மண்டபம் முன்பு நீர் மோர் பந்தலை துவக்கி வைத்து இளநீர் வழங்கினார். அருகில் பகுதி திமுக செயலாளர் கிருஷ்ண பாண்டியன்,வட்டக் திமுக செயலாளர் ஆறுமுகம் 97 வது வார்டு மாமன்ற உறுப்பினர் சிவசக்தி ரமேஷ் மற்றும் திமுக நிர்வாகிகள், மாநில பொதுகுழு உறுப்பினர் பி.எஸ் என். எல் செல்வம் ஆகியோர் உடன் இருந்தனர்.



காரைக்கால் மாவட்ட கால்நடை பராமரிப்புத்துறை மூலமாக திருமலைராயன் பட்டினத்தில் வசிக்கும் பொது மக்களுக்கு கிரிராஜா இனத்தைச் சேர்ந்த 1100 கோழிக்குஞ்சுகளை நிரவி திருப்பட்டினம் தொகுதி சட்டமன்ற உறுப்பினர் நாகதியாகராஜன் தலைமையில் பொதுமக்களுக்கு 50% மானிய விலையில் ஒரு குடும்ப அட்டைக்கு இரண்டு கோழிக்குஞ்சுகள் வீதம் அளிக்கப்பட்டது. இந்நிகழ்வில் இணை இயக்குனர் கால்நடை பராமரிப்புத்துறை கோபிநாத் மற்றும் மருத்துவர் சுரேஷ் மற்றும் முக்கிய பிரமுகர்கள், பயனாளிகள் உடன் இருந்தனர்.

### பெருங்களூரில் நடைபெற்ற எம்.எஸ்.சுவாமிநாதன்

# ஆராய்ச்சி நிறுவன நடமாடும் பயிர் மருத்துவ முகாம் வாகனத்தை கலெக்டர் துவக்கி வைத்தார்



பெருங்களூர், ஏப்.13-

எம்.எஸ்சுவாமிநாதன் ஆராய்ச்சி நிறுவனம் நடமாடும் பயிர் மருத்துவ முகாம் வாகனத்தை ஏற்பாடு செய்துள்ளது. இந்த வாகனத்தை புதுக்கோட்டை மாவட்ட ஆட்சித்தலைவர் கவிதா ராமு பெருங்களூரில் நடைபெற்ற மக்கள் தொடர்பு முகாமில் துவக்கிவைத்தார். எம்.எஸ்.சுவாமிநாதன் ஆராய்ச்சி நிறுவன முதன்மை விஞ்ஞானி ஆர்.ராஜ்குமார் நடமாடும் பயிர்மருத்துவ முகாம் வாகன செயல்பாடுகளை விளக்கி கூறினார்.

பயிர்மருத்துவ முகாம், பயிர்களில் ஏற்படும் பூச்சி, நோய், நுண்ணூட்ட சத்து குறைபாடு போன்றவைகளை பயிற்சி பெற்ற பயிர் மருத்துவர்கள் நுண்ணோக்கி மற்றும் பிற தொழில் நுட்ப சாதனங்கள் உதவியுடன் துல்லியமாக கண்டறிந்து உரிய பரிந்துரைகளை வழங்குவார்கள். பரிந்துரைகள் சுற்றுச்சூழலுக்கு பாதிப்பில்லாத அந்தந்த பகுதியில் கிடைக்கக் கூடியதாக இருக்கும். இந்தநடமாடும் பயிர்மருத்துவ வாகனம் விவசாயிகளின் தோட்டங்களுக்கே நேரடியாக சென்று பயிர்களில் ஏற்படும் பாதிப்புகளை கண்டறிந்து உரிய தீர்வுகளை வழங்கும். இதனால் இடுபொருள்கள் செலவு குறையும் விளைச்சல் மற்றும் வருமானம் அதிகரிக்கும் என்றார்.

நிகழ்ச்சியில் மாவட்ட வருவாய் அலுவலர் மா.செல்வி, மாவட்ட ஊரக வளர்ச்சி முகமையின் திட்ட இயக்குநர். நா.கவிதபிரியா, மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (வேளாண்மை) வி.எம்.ரவிச்சந்திரன், முன்னோடி விவசாயி ஜி.எஸ். தனபதி மாவட்ட குழந்தைகள் நலக்குழுத் தலைவர் கே. சதாசிவம், தமிழ்நாடு அறிவியல் இயக்க மாவட்ட தலைவர் எம்.வீரமுத்து, வேளாண்மைதுறை உதவி இயக்குனர், புதுக்கோட்டை எஸ்.கிருஷ்ணமூர்த்தி, வேளாண்மை அலுவலர். எஸ். முகமதுரபி ஆகியோர் பங்கேற்றனர், எம். எஸ். சுவாமிநாதன் ஆராய்ச்சி நிறுவன ஒருங்கிணைப்பாளர். விமலா மற்றும் பயிர் மருத்துவ தொழில்நுட்ப அலுவலர்கள் ஏ. கோபால் ஆகியோர் நிகழ்ச்சியை ஒருங்கிணைத்தனர்.

### திருவரங்குளம் அருகே வம்பன் வீரமாகாளியம்மன் கோவில்

# பங்குனித் திருவிழாவை முன்னிட்டு மாட்டு வண்டி எல்கை பந்தயம்



திருவரங்குளம், ஏப்.13-

புதுக்கோட்டை மாவட்டம் திருவரங்குளம் அருகே உள்ள வம்பன் வீரமாகாளியம்மன் கோவில் பங்குனித் திருவிழா கடந்த வாரம் காப்பு கட்டுதலுடன் துவங்கி நடைபெற்று வருகின்றது, எட்டாம் நாள் திருவிழாவை முன்னிட்டு பக்தர்கள் விரதம் இருந்து பால்குடம், காவடி எடுத்தனர். காலை 7 மணிக்கு வம்பன் வீரமாகாளியம்மன் கோவில் அருகில் இருந்து புதுக்கோட்டை ஆலங்குடி சாலையில் திருவரங்குளம் வழியாக மாட்டு வண்டி, குதிரை வண்டி பந்தயம் நடைபெற்றது.

போட்டியில் புதுக்கோட்டை, அறந்தாங்கி, பேராவூரணி, சிவகங்கை, திருச்சி, தஞ்சாவூர் உள்ளிட்ட தமிழகத்தின் பல்வேறு பகுதிகளில் இருந்து மாட்டு வண்டிகள் குதிரை வண்டி பந்தயம் நடைபெற்றது, ஊட்டியில் வெற்றி பெற்ற மாடு மற்றும் குதிரை வண்டிகளுக்கு ரொக்கப் பரிசு மற்றும் சாரதிக்கு பரிசு வழங்கப்பட்டது, நிகழ்சிக்கான ஏற்பாடுகளை மாஞ்சன்விடுதி கொத்தகோட்டை ஊராட்சி பொதுமக்கள், இளைஞர்கள், விழாக் குழுவினர், மண்டகப் படிதாரர்கள் ஆகியோர் செய்திருந்தனர், பாதுகாப்பு ஏற்பாடுகளை ஆலங்குடி போலீசார் செய்திருந்தனர்.

# செந்துறையில் மார்க்சிய கம்யூனிஸ்ட் கட்சி சார்பில் கண்டன ஆர்ப்பாட்டம்



அரியலூர்,ஏப்.13-

செந்துறையில் மார்க்சிய கம்யூனிஸ்ட் கட்சி சார்பில் கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெற்றது.

அரியலூர் மாவட்டம் செந்துறை தாலுக்கா அலுவலகம் முன்பு மார்க்சிய கம்யூனிஸ்ட் கட்சி சார்பில் நடைபெற்ற கண்டன ஆர்ப்பாட்டத்திற்கு கட்சியின் செந்துறை ஒன்றிய செயலாளர் கு அர்ச்சுனன் தலைமை வகித்தார். செந்துறை தாலுக்கா, ஆலத்தியூர், ஆதனக்குறிச்சி கிராமத்தில் வசிக்கும் ஆதிதிராவிட மக்களுக்கு, இலவச வீட்டு மனைபட்டா வழங்க வேண்டும் என்பன உள்பட ஒன்பது கோரிக்கைகளை வலியுறுத்தி நடைபெற்ற கோரிக்கை விளக்க ஆர்ப்பாட்டத்தில், கட்சியின் மாநில குழு உறுப்பினர் வாலண்டினா சிறப்புரையாற்றினார்.

மார்க்சிய கம்யூனிஸ்ட் கட்சியின் அரியலூர் மாவட்ட செயலாளர் இளங்கோவன், மாவட்ட செயற்குழு உறுப்பினர்கள் மணிவேல், மருவத்தூர் கந்தசாமி, அம்பிகா, மாவட்ட குழு உறுப்பினர் பன்னீர்செல்வம், உள்ளிட்டோர் கோரிக்கைகளை வலியுறுத்தி பேசினார்கள். ஆர்ப்பாட்டத்தில் திரிசங்கு, மகேந்திரன், இளையபெருமாள், ராமசாமி, சரவணன் குமார், பரமசிவம், மீனா, பானுமதி, தனம், பல்லவி, அபிராமி, அகிலா, மகேஸ்வரி, மீனா உள்ளிட்ட பலர் பங்கேற்றனர்.

# அரியலூர் தெற்கு ஒன்றிய அதிமுக சார்பில் தண்ணீர் பந்தல் திறப்பு விழா



அரியலூர்,ஏப்.13-

அரியலூர் தெற்கு ஒன்றிய அதிமுக சார்பில் தண்ணீர் பந்தல் திறப்பு விழா நடைபெற்றது.

அரியலூர் தெற்கு ஒன்றிய அதிமுக சார்பில், வி. கைகாட்டி கடைவீதியில், பொது மக்கள் நலனுக்காக அமைக்கப்பட்ட கோடைகால தண்ணீர் பந்தல் திறப்பு விழா நிகழ்ச்சியில், கட்சியின் அரியலூர் தெற்கு ஒன்றிய செயலாளர் பொய்யூர் பாலசுப்பிரமணியன் வரவேற்றுப் பேசினார். மாவட்ட பொருளாளர் அன்பழகன் முன்னிலை வகித்தார். கோடைகால தண்ணீர் பந்தலை திறந்து வைத்து, பொதுமக்களுக்கு நீர் மோர், பானகம், இளநீர், தர்பூசணி, உள்ளிட்டவற்றை, அதிமுக அரியலூர் மாவட்டச் செயலாளரும், முன்னாள் அரசு தலைமை கொறடாவுமான தாமரை எஸ். ராஜேந்திரன் வழங்கி பேசினார்.

இவ்விழாவில் தாமரைக் குளம் ஊராட்சி மன்றத் தலைவர் பிரேம்குமார், அரியலூர் கூட்டுறவு பால் உற்பத்தியாளர் சங்கத் தலைவர் கல்லங்குறிச்சி பாஸ்கர், ஒன்றிய கவுன்சிலர்கள் மண்ணுழி சுந்தரவடிவேல், கடுகூர் முருகேசன், வெளிப் பிரிங்கியம் காமராஜ், தேளூர் நல்லத்தம்பி, குமரேசன் உள்பட பலர் கலந்து கொண்டனர்

# அரியலூரில் ராகுல்காந்தியின் எம்பி பதவி நீக்கத்தை கண்டித்து இளைஞர் காங்கிரஸ் சார்பில் ஆர்ப்பாட்டம்



அரியலூர்,ஏப்.13-

ராகுல் காந்தியின் எம்பி பதவி நீக்கத்தை கண்டித்து, அரியலூரில் இளைஞர் காங்கிரஸ் சார்பில் ஆர்ப்பாட்டம் நடைபெற்றது.

குஜராத் மாநில நீதிமன்ற தீர்ப்பை அடுத்து, காங்கிரஸ் கட்சித் தலைவர் ராகுல் காந்தியின் எம்பி பதவி தகுதி நீக்கத்தை கண்டித்து, அரியலூர் பேருந்து நிலையம் அருகே காமராஜர் சிலை முன்பு, அரியலூர் மாவட்ட இளைஞர் காங்கிரஸ் கட்சி சார்பில் நடைபெற்ற கண்டன ஆர்ப்பாட்டத்திற்கு, இளைஞர் காங்கிரஸ் மாவட்டத் தலைவர் புகழ் தலைமை வகித்தார், நகர காங்கிரஸ் தலைவர் மாமு சிவக்குமார் வரவேற்றுப் பேசினார்.

கண்டன ஆர்ப்பாட்டத்தில், தமிழக இளைஞர் காங்கிரஸ் கட்சியின் மாநிலத் தலைவர் லெனின் பிரசாத், காங்கிரஸ் கட்சியின் மாநில துணைத்தலைவர் மேலணிக்குழி ராஜேந்திரன், முன்னாள் அரியலூர் நகரத் தலைவர் எஸ்.எம்.சந்திரசேகர், காங்கிரஸ் கட்சியின் முன்னாள் மாவட்ட தலைவர் சீனி பாலகிருஷ்ணன், மாவட்ட எஸ்சி எஸ்டி பிரிவுத் தலைவர் ஏ.பி.சுரேஷ், மகிளா காங்கிரஸ் தலைவி சகுந்தலா தேவி உள்ளிட்டோர் பேசினர்.

காங்கிரஸ் கட்சியின் மாவட்ட பொதுச் செயலாளர் பூண்டி சந்தானம், குலமாணிக்கம் ஊராட்சி மன்றத் தலைவி ரேணுகாதேவி, ஒன்றியத் தலைவர் கர்ணன், ஓய்வு பெற்ற எஸ்ஐ சுப்பிரமணியன், சேவாதளம் சிவா, மணக்கால் பழனிமுத்து, உள்ளிட்ட பலர் பங்கேற்ற இந்த கண்டன ஆர்ப்பாட்டத்தின் முடிவில், காங்கிரஸ் கட்சியின் முன்னாள் நகரத் தலைவர் ஏ.பி.எஸ்.பழனிச்சாமி ஆகியோர் நன்றி கூறினர்.

# ஆலங்குடியில் இந்திய ஐக்கிய விவசாய தொழிலாளர் சங்கம் சார்பில் வட்டாட்சியர் அலுவலகம் முன்பு ஆர்ப்பாட்டம்



ஆலங்குடி, ஏப்.13-

புதுக்கோட்டை மாவட்டம் ஆலங்குடி தாலுகா பாலையூர் கண்மாயில் சின்னமடை, பெரியமடை, கோயில் மடை, ராவுத்தர் மடை, ஐயா மடை உள்ளிட்ட பாசன வாய்க்கால்களை சர்வே செய்து தூர்வாரி செப்பனிடக் கோரி இந்திய ஐக்கிய விவசாய தொழிலாளர் சங்கத்தின் சார்பில் ஆலங்குடி வட்டாட்சியர் அலுவலகம் முன்பு ஆர்ப்பாட்டம் நடைபெற்றது. விவசாய தொழிலாளர் சங்க மாவட்ட செயலாளர் சி.வேலம் தலைமை வகித்தார், விவசாயிகள் நல்லதம்பி, சேகர், சக்திவேல், சிதம்பரம் நாகலிங்கம், தட்சிணாமூர்த்தி, ராசு,அன்பு காசி ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

இந்திய ஐக்கிய கம்யூனிஸ்ட் கட்சியின் மாவட்ட துணைச் செயலாளர் ஆர்.சொர்ணகுமார் ஆர்ப்பாட்டத்தை துவக்கி வைத்து பேசினார், கோரிக்கைகளை விளக்கி மாவட்ட செயலாளர் எம்.என்.ராமச்சந்திரன் பேசினார், விவசாய சங்க மாவட்ட செயலாளர் ஜி தங்கராஜ்,விவசாய தொழிலாளர் சங்க மாவட்ட தலைவர் அம்பிகாபதி, மாதர் சங்க மாவட்டத் தலைவர் சரஸ்வதி, புதுக்கோட்டை நகரச் செயலாளர் ரமேஷ், கலை இலக்கிய மன்ற பொறுப்பாளர் வெங்கடேஷ், மாவட்ட குழு உறுப்பினர்கள் மணி செல்லப்பா, சாகுல்ஹமீது, சாம்சன் உள்ளிட்டோர் பங்கேற்றனர், ஆர்ப்பாட்டம் முடிவில் ஆலங்குடி வட்டாட்சியரிடம் கோரிக்கை மனு அளிக்கப்பட்டது.



பூலித்தேவனின் தளபதியாக இருந்த வெண்ணிகாலாடியாரின் சிறப்பை போற்றும் வகையில் தற்போது தமிழக சட்டமன்ற கூட்டத்தொடரில் தென்காசி மாவட்டம் விஸ்வநாதபேரியில் அவருக்கு ரூபாய் 50 லட்சம் மதிப்பில் சிலை வைக்கப்படும் என தமிழக அரசு அறிவித்துள்ளது, இது தென்காசி மாவட்ட மக்களை மிகுந்த மகிழ்ச்சியில் ஆழ்த்தியுள்ளது, சுதந்திரப் போராட்ட வீரர் வெண்ணிகாலாடியாருக்கு சிலை அமைக்க உத்தரவிட்ட முதல்வர் மு.க ஸ்டாலினுக்கும் அமைச்சர் வெள்ளகோவில் சாமிநாதனுக்கும் தென்காசி வடக்கு மாவட்ட செயலாளர் ராஜா எம்எல்ஏ நன்றி தெரிவித்துள்ளார்.

PUDUGAI VARALARU - National Tamil Daily : Published by S.Sivasakthivel at Plot No.1103,Periyar Nagar, Rajagopalapuram Post,Pudukkottai-622003,TamilNadu State and Printed at V.C Printograph, 144,M.K Kottai Road, Elumalaiyan Rice Mill Complex, Ambigapuram, Ariyamangalam, Tiruchirappalli-620010, TamilNadu State. Editor: S.Sivasakthivel, Phone : 04322-261577, E.Mail: pudugaivaralaru@gmail.com.

### அங்கன்வாடி மற்றும் நியாய விலை கடைகளில்

# மாவட்ட ஆட்சியர் மகாபாரதி அரிசி மற்றும் பருப்பின் தரம் குறித்து அதிரடி ஆய்வு



தரங்கம்பாடி, ஏப். 13 –

மயிலாடுதுறை மாவட்டம், தரங்கம்பாடி தாலுகா செம்பனார்கோவில் ஊராட்சி ஒன்றியத்திற்குட்பட்ட டீ. மணல்மேடு மற்றும் காட்டிச்சேரி ஊராட்சியில் உள்ள அங்கன்வாடி மற்றும் நியாய விலை கடைகளில் மயிலாடுதுறை மாவட்ட ஆட்சியர் மகாபாரதி திடீர் ஆய்வு மேற்கொண்டார். ஆய்வின் போது பொதுமக்களுக்கு வழங்கப்படும் அரிசி மற்றும் பருப்பின் தரம் குறித்து ஆய்வு செய்தார்.

நியாய விலை கடைகளுக்கு வந்திருந்த பொது மக்களிடம் அரிசி மற்றும் பருப்புகள் தரமாக வழங்கப்படுகிறதா என்பது குறித்து கேட்டறிந்தார். அங்கன்வாடியில் குழந்தைகளுக்கு தரமான உணவு வழங்கப்படுகிறதா என்பது குறித்தும் குழந்தைகளின் பெற்றோரிடம் கேட்டறிந்தார். மேலும் நியாயவிலைகடை மற்றும் அங்கன்வாடிகளுக்கு வழங்கப்படும் உணவுப் பொருட்களின் தரம் குறித்து மாதம் ஒருமுறை ஆய்வு செய்ய வேண்டும் என வட்ட வழங்கல் அலுவலரிடம் உத்தரவிட்டார்.

தொடர்ந்து காட்டுச்சேரி ஊராட்சி சமத்துவபுரத்தில் 95 புதிய வீடுகள் கட்டும் பணியினை ஆய்வு செய்த மாவட்ட ஆட்சியர் சுவர்களை தட்டி பார்த்து தரம் குறித்து ஆய்வு செய்தார். அதனை அடுத்து 42 லட்சம் செலவில் கட்டப்பட்டு வரும் காட்டுச்சேரி ஊராட்சி மன்ற அலுவலக கட்டுமான பணிகளையும் ஆய்வு செய்தார்.

ஆய்வின் போது வட்டார வளர்ச்சி அலுவலர்கள் மீனா, விஜயலட்சுமி, காட்டுச்சேரி ஊராட்சி மன்ற தலைவர் விஜயலட்சுமி சாமிநாதன் மற்றும் அரசு அலுவலர்கள் துறை சார் அதிகாரிகள் உடன் இருந்தனர்.



ஈரோடு மாவட்ட கூடுதல் ஆட்சியர் (வளர்ச்சி) / திட்ட இயக்குநர் (மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை) நாரணவ்ரே மனிஷ் ஷங்கர்ராவ் ஈரோடு கோபிசெட்டிபாளையத்தில் உள்ள கோபி கலை மற்றும் அறிவியல் கல்லூரியில், கல்லூரி மாணவ, மாணவியர்களிடையே தமிழர்களின் மரபையும், தமிழ் பெருமிதத்தையும் உணர்த்தும் வகையில் நடைபெற்ற பண்பாட்டு பரப்புரை நிகழ்வின் 3-வது நிகழ்ச்சியில் பேசினார். உடன் இணை இயக்குநர் (தமிழ் இணையக் கல்வி கழகம்) கோமகன், கோபிசெட்டிபாளையம் வட்டாட்சியர் ஆசியா, முதல்வர் (கோபி கலை மற்றும் அறிவியல் கல்லூரி) டாக்டர் வி.தியாகராசு, பேராசிரியர்கள், கல்லூரி மாணவ, மாணவியர்கள் மற்றும் துறை சார்ந்த அரசு அலுவலர்கள் இருந்தனர்.



ஈரோடு மாவட்ட ஆட்சித்தலைவர் ஹெச். கிருஷ்ணனுண்ணி மாவட்ட ஆட்சித்தலைவர் அலுவலகத்தில் நடைபெற்ற மக்கள் குறைதீர்க்கும் நாள் கூட்டத்தில் மாற்றுத்திறனாளிகளிடம் குறைகளைக் கேட்டறிந்து, இலவச வீட்டுமனை பட்டா பெற வேண்டிய கோரிக்கை மனுவை மாற்றுத்திறனாளிகளிடம் பெற்று கொண்டு நடவடிக்கை எடுப்பதாக உறுதியளித்தார்.

# அதிமுக சார்பில் 7 இடங்களில் தண்ணீர் பந்தல் திறந்து வைத்து நலத்திட்ட உதவிகள் வழங்கல்



ஊத்துக்கோட்டை, ஏப். 13 –

தமிழக முன்னாள் முதல்வரும், தமிழக சட்டமன்ற எதிர்க்கட்சித் தலைவரும், அதிமுக பொதுச் செயலாளருமான எடப்பாடி கே.பழனிச்சாமியின் ஆணைக்கிணங்க திருவள்ளூர் வடக்கு மாவட்டம், கும்முடிப்பூண்டி சட்டமன்ற தொகுதி, கும்முடிப்பூண்டி ஒன்றிய அதிமுக சார்பில் புதுவாயல், கவரைப்பேட்டை, கும்மிடிப்பூண்டி, புது கும்மிடிப்பூண்டி, எளாவூர், ஆரம்பாக்கம், மாதர்பாக்கம் ஆகிய ஏழு இடங்களில் கோடை வெயிலிலிருந்து பொதுமக்களை காத்திடும் வகையில் தண்ணீர் பந்தல் திறந்து வைக்கும் நிகழ்ச்சி நடைபெற்றது.

மேலும் மாதர்பாக்கம் ஊராட்சியில் பொது மக்களுக்கு இலவச சேலை, மதிய உணவு உள்ளிட்ட நலத்திட்ட உதவிகள் வழங்கும் நிகழ்ச்சி நடைபெற்றது. இந்நிகழ்ச்சிகளுக்கு கும்மிடிப்பூண்டி ஒன்றிய செயலாளர் வி.கோபால் தலைமை தாங்கினார்.

திருவள்ளூர் வடக்கு மாவட்ட புரட்சி தலைவி அம்மா பேரவை மாவட்ட செயலாளரும், எல்லாபுரம் வடக்கு ஒன்றிய செயலாளரும், கும்முடிப்பூண்டி தொகுதி முன்னாள் சட்டமன்ற உறுப்பினருமான கே.எஸ். விஜயகுமார் முன்னிலை வகித்தார். இதில் சிறப்பு அழைப்பாளராக திருவள்ளூர் வடக்கு மாவட்ட செயலாளரும், பொன்னேரி தொகுதி முன்னாள் சட்டமன்ற உறுப்பினருமான சிறுணியம் பி.பலராமன் கலந்து கொண்டு தண்ணீர் பந்தலை திறந்து வைத்து பொதுமக்களுக்கு நலத்திட்ட உதவிகளை வழங்கினார்.

இந்நிகழ்ச்சிகளில், பொதுக்குழு உறுப்பினர் ஆர். அபிராமன், திருவள்ளூர் வடக்கு மாவட்ட புரட்சித்தலைவி அம்மா பேரவை துணைத் தலைவர் எல்.சுகுமாரன், கும்முடிப்பூண்டி ஒன்றிய குழு தலைவர் கே.எம்.எஸ். சிவகுமார், திருவள்ளூர் வடக்கு மாவட்ட துணை செயலாளர்கள் எஸ். எம்.ஸ்ரீதர், பெரியபுல்லூர் சியாமளா தன்ராஜ், இளைஞர் மற்றும் இளம்பெண்கள் பாசறை மாவட்ட செயலாளர் டி.சி. மகேந்திரன், தகவல் தொழில்நுட்ப அணி மாவட்டச் செயலாளர் இமயம் எஸ்.மனோஜ், அண்ணா தொழிற்சங்க மாவட்ட துணைச் செயலாளர் எம்.நாகராஜ், மாவட்ட அம்மா பேரவை இணைச் செயலாளர்கள் பல்லவாடா ஜெ.ரமேஷ் குமார், எளாவூர் டி.முல்லைவேந்தன், போந்தவாக்கம் ஊராட்சி மன்றத் துணைத் தலைவர் இரா.சுதாகர், கும்முடிப்பூண்டி ஒன்றிய துணை செயலாளரும், முக்கரம்பாக்கம் ஒன்றிய கவுன்சிலருமான ஏ.டி. நாகராஜ், ஒன்றிய இளைஞரணி தலைவர் கே.சங்கர், கும்முடிப்பூண்டி தகவல் தொழில்நுட்ப அணி ஒன்றிய செயலாளர் வி.பி. ராஜா, கும்மிடிப்பூண்டி பேரூர் அவைத் தலைவர் மு.க.சேகர் மற்றும் மாவட்ட, ஒன்றிய, பேரூர், கிளை நிர்வாகிகளும், சார்பு அணி நிர்வாகிகளும், அணிகளின் அமைப்பாளர்களும், உள்ளாட்சி அமைப்பு பிரதிநிதிகளும் ஏராளமானோர் கலந்து கொண்டனர்.

# அதிமுக சார்பில் தாமரைப்பாக்கத்தில் தண்ணீர் பந்தல் திறப்பு: முன்னாள் அமைச்சர் பா.பெஞ்சமின் பங்கேற்பு



திருவள்ளூர், ஏப். 13 –

தமிழக முன்னாள் முதல்வரும், தமிழக சட்டமன்ற எதிர்க்கட்சித் தலைவரும், அதிமுக பொதுச்செயலாளருமான எடப்பாடி கே.பழனிச்சாமியின் ஆணைக்கிணங்க திருவள்ளூர் மத்திய மாவட்டம், எல்லாபுரம் தெற்கு ஒன்றிய அதிமுக சார்பில்கோடைவெயிலின் தாக்கத்திலிருந்து பொதுமக்களை காக்கும் வகையில் தண்ணீர் பந்தல் திறக்கும் நிகழ்ச்சி தாமரைப்பாக்கம் ஊராட்சியில் நடைபெற்றது.

இந்நிகழ்ச்சிக்கு எல்லாபுரம்தெற்குஒன்றிய அதிமுக செயலாளர் எம்.மகேந்திரன் தலைமை தாங்கினார். பூந்தமல்லி முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் மணிமாறன் முன்னிலை வகித்தார். இதில் சிறப்பு அழைப்பாளராக திருவள்ளூர் மத்திய மாவட்ட அதிமுக செயலாளரும், முன்னாள் அமைச்சருமான பா.பெஞ்சமின் கலந்து கொண்டு தண்ணீர் பந்தலை ரிப்பன் வெட்டி திறந்து வைத்து பொதுமக்களுக்கு நீர் மோர், தர்பூசணி, இளநீர், குளிர் பானங்கள் உள்ளிட்டவைகளை வழங்கினார்.

இதில் அதிமுக நிர்வாகிகள் குழந்தைவேலு, வெங்கல் லிங்கன், குருவாயல்தயாளன், திருவேங்கடம், மணிகண்டன் உள்ளிட்ட மாவட்ட, ஒன்றிய, பேரூர், கிளை நிர்வாகிகளும், அணிகளின் அமைப்பாளர்களும், உள்ளாட்சி அமைப்பு பிரதிநிதிகளும், பொதுமக்களும் ஏராளமானோர் கலந்து கொண்டனர். நிகழ்ச்சிக்கான ஏற்பாடுகளை எல்லாபுரம் தெற்கு ஒன்றிய அதிமுகவினர் செய்திருந்தனர்.

# திருவரங்குளம் வட்டார வேளாண்மை உதவி இயக்குனர் மற்றும் ஆலங்குடி வட்டாட்சியர் விடுத்துள்ள செய்தி குறிப்பு

திருவரங்குளம்,ஏப்.13–

புதுக்கோட்டை மாவட்டம் திருவரங்குளம் வட்டார வேளாண்மை உதவி இயக்குனர் வெற்றிவேல் ஆலங்குடி வட்டாட்சியர் விசுவநாதன் ஆகியோர் விடுத்துள்ள செய்தி குறிப்பில் இவ்வாறு கூறியுள்ளனர்.

திருவரங்குளம் வட்டார அளவில் வேளாண்மை அடுக்குத் திட்டத்தில் பயன்பெற தமிழக அரசின் பல்வேறு துறை சார்ந்த திட்டங்களில் விவசாயிகள் கிரைன்ஸ் என்ற இணையதளத்தில் இணைவதற்கு விவசாயிகள் தங்களது ஆதார் எண், புகைப்படம், நில உரிமை ஆவணங்களுடன் அருகில் உள்ள கிராம நிர்வாக அலுவலகம், வட்டார வேளாண்மை அலுவலகம், தோட்டக்கலைத் துறை அலுவலகம் ஆகிய இடங்களில் சென்று கிரைன்ஸ் இணையதளத்தில் பதிவேற்றம் செய்து கொண்டு அதன் அடிப்படையில் வேளாண்மை உழவர் நலத்துறை, பேரிடர் மேலாண்மை துறை, கூட்டுறவுத்துறை, பட்டு வளர்ச்சி துறை, கால்நடை பராமரிப்புத்துறை, வேளாண்மை பொறியியல் துறை, வேளாண்மை விற்பனை மற்றும் வேளாண்மை வணிகம், விதை சான்றளிப்பு துறை, சர்க்கரை துறை மூலம் பெறப்படும் நிதி திட்ட பலன்களை விவசாயிகள் வங்கி கணக்கில் நேரடியாக அளிக்கப்படும் இதனை விவசாயிகள் முழுமையாக பயன்படுத்திக்கொள்ள கேட்டுக் கொண்டுள்ளனர்.

### பெருங்களூரில் நடைபெற்ற மக்கள் தொடர்பு முகாமில்

# 2.17 கோடி மதிப்பீட்டில் 1029 பயனாளிகளுக்கு கலெக்டர் நலத்திட்ட உதவிகளை வழங்கினார்



ஆதனக்கோட்டை, ஏப்.13–

புதுக்கோட்டை மாவட்டம் பெருங்களூர் கிராம ஊராட்டசியில் நடைபெற்ற மக்கள் தொடர்பு முகாமில் 1,029 பயனாளிகளுக்கு ரூ.2.17 கோடி மதிப்பீட்டில் பல்வேறு நலத்திட்ட உதவிகளை மாவட்ட ஆட்சித்தலைவர் கவிதாராமு வழங்கினார். புதுக்கோட்டை வட்டம், பெருங்களூர் வருவாய் கிராமத்தில் மக்கள் தொடர்பு முகாம் மாவட்ட ஆட்சித்தலைவர் கவிதாராமு தலைமையில் நடைபெற்றது.

இம்முகாமில் தமிழக அரசு பல்வேறு அரசுத் துறைகளின் வாயிலாக மேற்கொள்ளப்படும் மக்கள் நலத் திட்டங்கள் குறித்தும் அத்திட்டங்கள் மூலம் பயன்பெறுவதற்கான வழிமுறைகள் குறித்தும் தொடர்புடைய அலுவலர்களால் பொதுமக்களுக்கு எடுத்துரைக்கப்பட்டது. இம்முகாமில் தோட்டக்கலைத்துறை, வேளாண்மைத்துறை, சமூகநலத்துறை, ஒருங்கிணைந்த குழந்தைகள் வளர்ச்சித் திட்டம், கால்நடை பராமரிப்புத்துறை, பொதுசுகாதாரத்துறை, வேளாண் பொறியியல் துறை, வனத்துறை, மாற்றுத்திறனாளிகள் நலத்துறை உள்ளிட்ட பல்வேறுதுறைகளின் சார்பில் கண்காட்சி அரங்குகள் அமைக்கப்பட்டிருந்தது.

இம்முகாமில் வருவாய்த்துறை, ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை, பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத்துறை, ஊரக வளர்ச்சித்துறை, தோட்டக்கலைத்துறை, தொழிலாளர் நலத்துறை, வேளாண்மை மற்றும் உழவர் நலத்துறை, கூட்டுறவுத்துறை, மாற்றுத்திறனாளிகள் நலத்துறை உள்ளிட்ட துறைகளின் சார்பில், 1,029 பயனாளிகளுக்கு ரூ.2,17,30,452 மதிப்பீட்டில் பல்வேறு நலத்திட்ட உதவிகளை மாவட்ட ஆட்சித்தலைவர் கவிதாராமு வழங்கி பேசினார்

மக்கள் தொடர்பு முகாமில், முன்னாள் அரசு வழக்கறிஞர் கே.கே. செல்லப்பாண்டியன், மாவட்ட வருவாய் அலுவலர் மா.செல்வி, மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை திட்ட இயக்குநர் நா.கவிதப்பிரியா, மாவட்ட ஊராட்சிக் குழுத் தலைவர் த.ஜெயலட்சுமி, வாழ்ந்து காட்டுவோம் திட்ட மாவட்ட செயல் அலுவலர் ஜெய்கணேஷ், ஒன்றியக் குழுத்தலைவர் பி.சின்னையா, மாவட்ட இயக்க மேலாண்மை அலகு திட்ட இயக்குநர் ரேவதி, மாவட்ட வழங்கல் அலுவலர் ஆர்.கணேசன், புதுக்கோட்டை வருவாய் கோட்டாட்சியர் (பொறுப்பு) எம்.மாரி, மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலர் சே.மணிவண்ணன், கால்நடைத்துறை மண்டல இணை இயக்குநர் மரு. சம்பத், வேளாண்மை இணை இயக்குநர் (பொறுப்பு) ஆர்.மோகன்ராஜ், ஊராட்சிமன்றத் தலைவர் சரண்யாஜெய்சங்கர், வட்டாட்சியர் விஜயலெட்சுமி, வட்டார வளர்ச்சி அலுவலர் குமாரவேலன், உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள், அனைத்துத் துறை அரசு அலுவலர்கள், பயனாளிகள் மற்றும் பொதுமக்கள் கலந்துகொண்டனர்.

புதுக்கோட்டை மாவட்டம், பெருங்கொண்டான் விடுதி ஊராட்சி, கூழையான்விடுதியில், வாழ்ந்து காட்டுவோம் திட்டத்தின்கீழ், பெண் விவசாயிகளை கொண்ட தொண்டைமான் உழவர் உற்பத்தியாளர் நிறுவனத்தினையும் மாவட்ட ஆட்சித்தலைவர் கவிதாராமு துவக்கி வைத்தார், வாழ்ந்து காட்டுவோம் திட்டத்தின் மூலம் பெண் விவசாயிகளை கொண்டு உற்பத்தியாளர் குழுக்கள் மற்றும் உற்பத்தியாளர் நிறுவனம் அமைக்கப்பட்டு வருகிறது. இதன் தொடர்ச்சியாக தொண்டைமான் உழவர் உற்பத்தியாளர் நிறுவனமானது, முழுவதும் பெண் விவசாயிகளை கொண்டு பெருங்கொண்டான் விடுதி ஊராட்சி, கூழையான்விடுதியில் அமைக்கப்பட்டுள்ளது. இதில் புதுக்கோட்டை, திருவரங்குளம் மற்றும் அறந்தாங்கி வட்டாரங்களில் வாழ்ந்து காட்டுவோம் திட்டத்தின் மூலம் அமைக்கப்பட்ட உற்பத்தியாளர் குழுக்களை சார்ந்த 804 பெண் விவசாயிகள் உறுப்பினராக உள்ளனர், இதன் இயக்குனர்கள் மற்றும் செயல் அலுவலர்கள் அனைவரும் பெண்களே. இந்நிறுவனத்திற்கு வாழ்ந்து காட்டுவோம் திட்டம் மூலம் ரூ.5 லட்சம் துவக்க நிதி மானியமாகவும் மற்றும் ரூ.10 லட்சம் வணிக விரிவாக்க நிதி மானியமாகவும் வழங்கப்பட்டுள்ளது. வணிக விரிவாக்க நிதியினை பயன்படுத்தி கடலை தோல் பிரிக்கும் இயந்திரம் மற்றும் எண்ணெய் செக்கு இயந்திரம் வேளாண் பொறியியல் துறை உதவியுடன் வாங்கப்பட்டு எண்ணெய் ஆலை அமைக்கப்பட்டுள்ளது, இவ்வாலையின் மூலம் நல்லெண்ணெய், கடலெண்ணெய், தேங்காய் எண்ணெய் ஆகியவை உற்பத்தி செய்ய முடியும்.

இந்நிகழ்வில், வாழ்ந்து காட்டுவோம் திட்ட மாவட்ட செயல் அலுவலர் ஜெய்கணேஷ், செயற்பொறியாளர் (வேளாண் பொறியியல்துறை) செல்வம், செயல் அலுவலர் கிருபாகரன், வட்டாட்சியர் விஜயலெட்சுமி, வட்டார வளர்ச்சி அலுவலர் குமாரவேலன் மற்றும் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

# உளுந்தூர்பேட்டை அருகே உள்ள கூத்தாண்டவர் கோவில் சித்திரை திருவிழாவை முன்னிட்டு மாவட்ட ஆட்சியர் களஆய்வு



கள்ளக்குறிச்சி, ஏப்,12_

கள்ளக்குறிச்சி மாவட்டம், உளுந்தூர்பேட்டை வட்டம், கூவாகம் கிராமத்தில் அமைந்துள்ள அருள்மிகு கூத்தாண்டவர் திருக்கோவிலில் சித்திரைப்பெருவிழா நடைபெறவுள்ளதை முன்னிட்டு முன்னேற்பாடு மற்றும் பாதுகாப்பு பணிகள் குறித்து மாவட்ட ஆட்சித்தலைவர் ஷ்ரவன் குமார், மாவட்ட காவல் கண்காணிப்பாளர் மோகன்ராஜ் முன்னிலையில் நேற்று ஆய்வு மேற்கொண்டார். உலகப் புகழ்பெற்ற இந்தியாவின் வரலாற்று சிறப்புமிக்க அருள்மிகு கூத்தாண்டவர் சித்தரைப் பெருவிழா வரும் 18-ம்தேதி சாவை வார்த்தல் நிகழ்ச்சியுடன் சித்திரைப்பெருவிழா உற்சவம் தொடங்கி வரும் மே மாதம் 05-ம்தேதி வரை விமரிசையாக நடைபெறவுள்ளதை முன்னிட்டு களஆய்வு மேற்கொள்ளப்பட்டது.

கூத்தாண்டவர் திருவிழா மகாபாரதபோர் 18 நாட்கள் நடைபெற்றது போல் கூவாகம் கிராமத்தில் (அரவான்) கூத்தாண்டவர் திருவிழா ஒவ்வொரு ஆண்டும் சித்திரை மாதத்தில் 18 நாட்கள் வெகு விமரிசையாக நடைபெறவது வழக்கம், இவ்விழாவில் முக்கிய நிகழ்வுகளான மே 01-ம் தேதி அன்று மாலைகம்பம் நிறுத்துதல், 02-ம் தேதி இரவு சுவாமி திருக்கண் திறத்தல், திருநங்கைள் பக்தர்கள் திருமாங்கல்யம் ஏற்றுக்கொள்ளுதல், 03-ம் தேதி காலை திருத்தேர் வலம் வருதல், மாலையில் பந்தலடியில் பாரதம் படைத்தல், இரவு காளி கோவிலில் உயிர் பெறுதல் உள்ளிட்ட நிகழ்ச்சிகள் நடைபெறவுள்ளது. இவ்விழா காலங்களில் இந்தியாவின் பல மாநிலங்களிலிருந்தும், வெளிநாடுகளிலிருந்தும் பல ஆயிரகணக்கில் பக்தர்கள், திருநங்கைகள் வருகை புரிந்து திருவிழாவில் கலந்து கொள்வார்கள்.


மேலும், இவ்விழாவில் பக்தர்கள், திருநங்கைகள் கலந்து கொள்வதற்கு ஏதுவாக விழுப்புரம், பண்ருட்டி, திருக்கோவிலூர், உளுந்தூர்பேட்டை உள்ளிட்ட நகரங்களில் இருந்து கூடுதல் பேருந்து வசதிகள், தற்காலிக பேருந்து நிலையங்கள், இருசக்கர, நான்கு சக்கர வாகனங்கள் நிறுத்துமிடங்கள் கூடுதலாக ஏற்படுத்தப்படவுள்ளது. மேலும், பக்தர்களுக்கு திருவிழா நடைபெறும் பகுதியில் பாதுகாக்கப்பட்ட குடிநீர் வசதி, தற்காலிக கழிவறை வசதியும் ஏற்படுத்திடவும், கூடுதலான பக்தர்கள் வருகை புரிவதை முன்னிட்டு கண்காணிப்பு கேமராக்கள் பொருத்தி காவல் பணியில் கூடுதல் காவலர்கள் ஈடுப்படுத்தப் படவுள்ளனர். மேலும், போதியளவில் மருத்துவ குழுக்களும், தடையின்றி மின்சார வசதியும் ஏற்படுத்திடவும், பக்தர்கள் மற்றும் திருநங்கைகள் திருவிழாவில் பாதுகாப்பாக கலந்து கொள்வதற்கான அனைத்து முன்னேற்பாடு பணிகளும் சிறப்புடன் விரைந்து மேற்கொள்ள வேண்டுமென தொடர்புடைய அலுவலர்களுக்கு அறிவுறுத்தப்பட்டது என மாவட்ட ஆட்சித்தலைவர் தெரிவித்தார்.

இக்கூட்டத்தில் இந்து சமய அறநிலைய துறை துணை ஆணையர், நகை சரிபார்ப்பு அலுவலர் சிவலிங்கம், இந்து சமய அறநிலைய துறை உதவி ஆணையர் சிவாகரன், திருக்கோவிலூர் கோட்டாட்சியர் யோகஜோதி, உளுந்தூர்பேட்டை காவல் துணை கண்காணிப்பானர் மகேஷ், உளுந்தூர்பேட்டை வட்டாட்சியர் ராஜி, உளுந்தூர்பேட்டை வட்டார வளர்ச்சி அலுவலாகள் நடராஜன், செல்வபோதகர், செயல் அலுவலர் மதனா, கூவாகம் ஊராட்சி மன்றத் தலைவர் மகாலட்சுமி முருகேசன், அரசு அலுவலர்கள், திருநங்கைகள், இந்து சமய அறநிலையத்துறை அலுவலர்கள் பணியாளர்கள் மற்றும் பொதுமக்கள் கலந்து கொண்டனர்.



# புதுக்கோட்டை சமஸ்தானத்தின் ராஜமாதா காலமானார் இச்சடியில் இறுதிச் சடங்கு

# தமிழக சட்டசபையில் கவன ஈர்ப்பு தீர்மானம் இனி நேரலை செய்யப்படும்





# எதிர்க்கட்சிகளை ஒருங்கிணைக்கும் வரலாற்று தருணம் வந்துவிட்டது


சென்னை / புதுக்கோட்டை | 13.04.2023 | varalaruu.com | பக்கம்:4 | ரூ.10

புதுகை வரலாறு நாளிதழ்

# வரலாற்றில் இன்று



## இன்றைய பிறந்த நாள்

எஸ். ஏ. விக்கிரமசிங்க , இலங்கை இடதுசாரி அரசியல்வாதி (பி.1901) (இ.1981)



பட்டுக்கோட்டை கல்யாணசுந்தரம் , தமிழகத் திரைப்படப் பாடலாசிரியர், கவிஞர் (பி.1930) (இ.1959)



நிருபமா ராஜபக்ச , இலங்கை அரசியல்வாதி (பி.1962)



## இன்றைய நினைவு நாள்

டட்லி சேனாநாயக்க , இலங்கையின் அரசியல்வாதி, முன்னாள் பிரதமர் (பி.1911) (இ.1973)



பல்ராஜ் சாஹனி , இந்திய திரைப்பட நடிகர் (பி.1913) (இ.1973)



எஸ். பாலச்சந்தர் , தமிழக வீணைக் கலைஞர், திரைப்பட இயக்குனர் (பி.1927) (இ.1990)



கூன்டர் கிராசு , நோபல் பரிசு பெற்ற செருமானிய எழுத்தாளர் (பி.1927) (இ.2015)

